

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்ஷத்ரவாஸி

பிரேமில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்ரிகோணேஷ் பிரசுரம்

NAXATRAVSI
A Play and Scripts for mime
by PREMELL

© by the Author

First Edition: Augnst 1993

Published by
TRIKONESH PRACHURAM
41, I Street, Kamarajapuram
Nungambakkam, Madras-600 034

Sales Rights:
MUNTIL,
28, II Floor Shanti Complex,
26, Ranganathan st.,
T. Nagar, Madras-600 017

Printed by :
JENNYPAM,
13, Vanniyar 2nd street,
Chohlaimedu,
Madras-600 094

Prlce Rs: 12.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'டேவிட்'க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் பிற நூல்கள

- கைப்பிடியளவு கடல் [கவிதைகள்] *
- விமர்சன ஊழல்கள் [விமர்சனம்] *
- மேல்நோக்கிப் பயணம் [கவிதைகள்] *
- தமிழின் நவீனத்துவம் [விமர்சனம்]
- லங்காபுரி ராஜா [கவிதைகள்]
- ஆயி [குறுநாவல்]
- ஸ்ரீலங்காவின் தேசீயத் தற்கொலை [அரசியல்]

ஆசிரியரால் தொகுக்கப்பட்டவை

- படிமம் [பல்வேறு படைப்பாளிகளுடையவை]
- அப்பாதுரையின் தியானதாரா [ஆன்மிகம்]

- * விற்பனையில் இல்லாதவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. KUGAN
72. 2nd LANE
ANANDAPURI
TRINCO

முன்னுரை

புது வித நாடக இயக்கங்கள் மேலைநாடுகளின் தார்மிக க்ஷீணத்திற்கு எதிரொலியாக அங்கே கிளர்ந்தன. ஆசிய நாடுகளில் முக்கியமாக இந்திய உபகண்டத்தில், இதே க்ஷீணம், மேலைத்தேய பொருளாதார மதிப்பீடுகளின் மூட்டையோடு வந்து சேர்ந்த ஒன்று. இந்த இறக்குமதி மதிப்பீட்டு க்ஷீணமும் இந்திய மதிப்பீடுகளின் க்ஷீணங்களும் எங்கள் நகரியல் வாழ்வின் முகமூடிகளாக அன்றாட நிகழ்வு கொள்கின்றன. இதன் விளைவாக ஒரு புறம் மனித உறவுகளும் மறுபுறம் லட்சியப் பிரதிமைகளும் உணர்வின் களததில் பின்னமடைகின்றன. நக்ஷத்ரவாஸியின் கருக்களம் இது.

1972 ல் டில்லியில் எழுதப்பட்ட இந்த நாடகம், 1976ல் மதுரையின் 'பாலம்' பத்திரிகையில் பிரசுரம் பெற்றிருக்கிறது. தமிழ்ப்பாத்திரங்களை புதுடில்லியில் நிறுத்தி எழுதப்பட்ட இந்த நாடகம் தமிழர்களின் எந்த பூகோள வரம்புக்கும் உட்பட்டதல்ல. ஏனெனில் இன்று இந்நாடகத்தில் எழும் பிரச்னை உலகளாவிய தமிழ்ப்பிரச்னையாகி உள்ளது. இதனை இலங்கையிலும் இங்கிலாந்திலும் உள்ள சில தமிழ் நாடகவியலாளர்கள் நிரூபித்துள்ளனர். இலங்கையில் இந்நாடகம் இருவேறு குழுக்களின் மூலம் அரங்கேறியுள்ளது. இக்குழுக்களுள் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனில் இதனை அரங்கேற்றியிருக்கிறது. சென்னையிலோ, தமிழகத்திலோ, இந்தியாவில் எங்கேயுமோ அல்ல. ஏற்றி வைத்த தீபத்தின் ஒளி தூரத்தில்தானே விழும்!

இந்த நாடகத்தை மேடையேற்ற விரும்புகிறவர்கள் நாடகாசிரியனான என்னுடன் தொடர்பு கொண்ட பின்பே மேடையேற்றும் முயற்சியைத் தொடர வேண்டும். இதுவரை இது நிறைவேறாமையினால் நான் தொடர்ந்து எழுதியிருக்க வேண்டிய நாடகங்கள் எழுதப்படவில்லை. இழப்பு என்னுடையதல்ல.

சென்னை
24.6.1993

டி. அஜித்ராம் பிரேமிள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்ஷத்ரவாஸி

களம்	:	புது டில்லியில் ஒரு வாடகை ரூம்.
பாத்திரங்கள்	:	நக்ஷத்ரவாஸி வித்யா நாகன் பத்து உருவங்கள்
குரல்கள்	:	பெண் ஆண் போலீஸ் மற்றும் இந்த மூன்று குரல்களுக்கும் உரிய நிழல் கூத்து வடிவங்கள்.
காலம்	:	ஒரு கோடை இரவு சுமார் 11.00 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்ஷத்ர வாஸி

ஒரு ஸ்ருதியுடன் இருள் பரவுதல். மேடையிலும் சபையிலும் இருள் பரவிய பின் ஒரு கரகரத்த ஆண் குரலின் ஏகஸ்வரம் கேட்கிறது. இக்குரலின் கரகரப்பு அதன் சங்கீத யத்தனத்துக்கு தடையாகவே ஒலிக்கிறது. குரல் ஆரம்பித்த ஒரு சில விநாடிகளில் பெரிய நிலைக்கண்ணாடி ஒன்று சிதறும் ஒலி. இந்த ஒலியுடன் கரகரப்பு மறைந்து ஏகஸ்வரம் இனிய பண்பட்ட ஒரு பெண்குரலிலிருந்து தூரத்தே கேட்கிறது. அணுகி விரிகிறது ராக அலைகள். குரல் அணுகும் போதே திரை விலகி ஒளியும் பிறத்தல். மேடையும் சபையும் இன்னும் இருளிலேயே இருக்க, மேடையின் பகைப் புலமாக உள்ள வெண்திரையினுள்ளே ராகத்தின் பெருக்கத்தோடு ஒளியும் பெருகுதல். மேடையில் உள்ள உருவங்கள் அசைவற்று உறைவு கொண்ட நிழல்களாக நிற்றல்.

திரையை ஒட்டி மேடையின் பின்புலத்தில் வட்டமான தலைளோடு உட்கார்ந்திருக்கும் பத்து உருவங்களின் நிழல் வடிவங்கள். நீண்ட சிகையோடு தலைகுனிந்தபடி மேடையின் முன்புலத்தில் ஒரு உயரமான தோற்றம். சிக்கனமான தூரிகைத் தீற்றல்கள் போன்ற வெளிக்கோட்டு உருவில் மெல்லிய அங்கங்களால் ஆன கட்டில், மேஜை, நாற்காலி ஆகியவை ஒரு யந்திர அமைப்பை நினைவுறுத்துகின்றன, மேடை முன்புலத்தில், உடலை ஒட்டி கருப்புச் சோளி ஜீன்ஸ் அணிந்த உடற்கட்டு உள்ள யுவதி ஒருத்தியின் உடல் நிலை குலைந்து அண்ணாந்து வாய் திறந்து, கலைந்த கேசத்துடன் கிடப்பது மங்கி தெரிகிறது. அவளது மேல் பாதி உடல் புரண்டு கிடக்கும் நாற்காலி ஒன்றன் மேல் சரிந்து கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாடி உள்ள திரை லிங்க வடிவாக நீண்டு கூம்பிய ஒரு தூணினால் இரண்டு பகுதிகளாக பிரிந்துள்ளது. தூணி லிருந்து ஒரு நீண்ட நிலைக்கண்ணாடி முன் சரிந்து தொங்கு வதும் அதன் சிதறலும் கூட புலனாகின்றன. ஸ்ருதியுடன் ராகம், தேய்ந்து மறைதல். அதே சமயத்தில் திரையில் பொம்ம லாட்ட நிழல்கள். முதலில் தோன்றும் நிழல் பொம்மை லிங்க வடிவுக்கு இருபுறமும் உள்ள திரையின் பிரிவுகளிலும் ஆடுதல். பிறகு ஒரே புறத்தில் அதுவும் இரண்டாவது பொம்மையும் ஆட, இறுதியாக வரும் பொம்மைகள் மறுபுறத் தில் ஆடுதல். பொம்மைகள் திரையின் மேல் புறத்திலேயே ஆடுகின்றன. அதாவது உட்கார்ந்திருக்கும் நிழலுருவங் களுக்கு மேல் உயர. பொம்மைகளின் குரல்கள் கீச்சிடுபவை யாக இருக்கின்றன. முதலில் ஒரு பெண் பொம்மை நிழல் தலையில் கைகளால் அடித்துக் கொண்டு ஓடுதல். நிற்கும் போது நிழல் பொம்மைகள் பக்கவாட்டாக ஆடுகின்றன.

பெண் பொம்மை நிழல் :

கொலை! கொலை!

ஆண் பொம்மை நிழல் :

(தோன்றி நடந்து வந்து பெண் பொம்மை தன்னைத் தாண்டி அங்கும் இங்கும் ஓடுவதை திரும்பித் திரும்பி பார்த் தபடி) யாரது இப்போ வெளியே ஓடினானே அந்த ரூமிலே ருந்து யாரது?

பெண் பொம்மை நிழல் :

(இன்னும் ஓடி, கைகளை உதறியபடி) கொலை! ஐயய்யோ பயமாருக்கே! (நின்று ஆண் நிழலிடம்) ஏன் சும்மா நிக்கேள்? ஓடிப் போய் பொலீஸைக் கொண்டாங்கோ! (ஆணை விட்டு விலகி ஓடி, மீண்டும் அவனிடமே வந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயய்யோ என்னை இங்கே தனியே விட்டுட்டுப் போயிடாதீங்கோ!

ஆண் பொம்மை நிழல் :

ஏய்! கொஞ்சம் நில்லு! பொலீசுக்கு போன் பண்ண ஆளை அனுப்பியிருக்கேன். சில வேளை அடுத்தாத்து சேட் தானாகவே போன் பண்ணியிருப்பான். நீ பண்ற கலாட்டா போதாதா அவனுக்கு! எப்பவும் அவன் கண்ணும் காதும் இங்கேதானே!

பெண் பொம்மை நிழல் :

(தலையில் கைகளாலடித்து) ஆமா இந்தப் பொண்ணு இங்கே வந்தாலும் வந்தா. கண்ணும் காதும் மட்டுமா? எவனெவனோ வரான் போறான்.

ஆண் பொம்மை நிழல்:

எல்லாம் நீ கொடுத்த எடம் (ஓட யத்தனிக்கும் பெண் நிழலை இழுத்து நிறுத்தி) இப்போ யாரோ வெளியே ஓடினானே, பார்த்தாயோ?

பெண் பொம்மை நிழல்:

அது அந்த லாண்டரி பையன் நாகன்'னா ஓடினது. பாவம் சின்னப்பையன். பயந்துண்டு ஓடியிருக்கான்.

ஆண் பொம்மை நிழல் :

இப்போ ராத்திரி பதினொன்றுக்கு மேலே ஆவுது மணி; 'சின்னப் பையன்' நாகன் இங்கே ஏன் வந்தான்?

பெண் பொம்மை நிழல் :

கொலை செய்தவனை பாருங்க முதல்லே. அதோ உள்ளே நிக்கானே, ஜன்னல் வழியா தலை தெரியலே பரட்டையா? அவன்தான் கொலைகாரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இரண்டு பொம்மை நிழல்களும் தங்கள் தலைகளைச் சேர்த்து எட்டிப் பார்த்தல், இரண்டும் விலகுகின்றன. போலீஸ் இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டபிள்களுமாகமூன்று பொம்மை நிழல்கள் 'தாட் பூட்' என்று நடந்து வருதல்.

ஆண் பொம்மை நிழல் :

சரி, சரி. நீ உள்ளே போ! போலீஸ் வந்துட்டது!

இன்ஸ். பொம்மை நிழல் :

Where is the Murder?

பெண் பொம்மை நிழல் :

(அடக்கமாக ஆண் நிழலிடம் ஒட்டி நின்று) துப்பாக்கியோடே போகச் சொல்லுங்க. பின் கதவு வழியா போகச் சொல்லுங்க அதானே அந்தப் பொண்ணு ரூமுக்கு வழி. அவ ரூம் எடுத்து அஞ்சு மாசம் கூட இல்லே. பிரண்ட்ஸ் அப்படின்னு யார் யாரோல்லாம் வராங்க, (பேசியபடியே பெண் நிழல் கொஞ்சமாக ஆணை விட்டு விலகி இன்ஸ்பெக்டருக்கும் ஆணுக்கும் இடையில் போய் நின்று சுறுசுறுப்பாகத் தொடர்கிறது) இது என்ன நம்ப அரியக்குடியா இல்லே ஆனதாண்டவபுரமா? டெல்லி! சரிதான் அவா அவா பாடுன்னு நான் அந்தப் பொண்ணு கிட்டே வர்றவன் போறவன் பற்றி ஒன்றுமே கேக்கறதில்லே.

ஆண் பொம்மை நிழல்

உஷ்! உள்ளே போகச் சொன்னேனோல்லியோ!

(பெண் பொம்மை பேசி முடியும் போதே பின்னாடி பொம்மை நிழல்கள் ஆடிய திரையில் ஒளி மங்கி அணைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழல்களும் மறைகின்றன. உடனே மேடை மீது ஒளி பரவுதல். அது ஒரு அறை. நடுவே, அறையை ஆக்ரமித்த படி இளஞ்சிவப்புப் போர்வை விரித்த கட்டில். மேடையில் வலப்புறத்தில்—பார்வையாளருக்கு இடப்புறத்தில்-கட்டி லின் தலைப்பகுதி. சுவர்த்திரையைச் சமன்படப் பிரித்த தூண், ஒரு வெளிர் நீல நிறமாக ஒளியில் தெரிகிறது. கட்டிலுக்கு மேலே ஓரளவு முன் சரிந்து தொங்கும் பெரிய நிலைக்கண்ணாடியில் உள்ள சிதறல் ஒரு பெரிய நக்ஷத்திர வடிவில் இருக்கிறது. மேடையின் இடப்புறத்தில்—கட்டி லின் கால்மாட்டில், திறந்து மூடத்தக்க கதவு. கதவை ஒட்டி, சுவரோடு ஒரு மேஜை. மேஜையில் கிரீம், பவுடர் கள் போன்ற உபகரணங்கள், புத்தகங்கள், ஒரு நியூஸ் பத்திரிக்கை. மேஜையின் கீழே இரண்டு பெட்டிகள். மேஜைக்கு அந்தப் பக்கம் துணிமணிகளைத் தாங்கியுள்ள ஸ்டாண்டு ஒன்று. கட்டிலின் தலை மாட்டில் ஸ்டவ் முதலிய சமையல் உபகரணங்களைத் தாங்கிய சிறு மேஜை. அதன் அருகே ஒரு ஸ்டூல்.

மேடையின் முன்புலத்தில் புரண்டிருக்கும் நாற்காலி யில் சரிந்து கிடக்கும் பெண்ணுக்கும் கட்டிலுக்கும் இடையே வெண்ணிற பாண்டும் வெண்ணிற ஜிப்பாவும் அணிந்து நிற்கும் சற்றே ஒல்லியான நெடிய வாலிபன். ஜிப்பாவின் மேல் நீலநிற பெல்ட்டை இறுக்கமாக அணிந் திருக்கிறான். இந்த பெல்ட்டின் கோர்வை வெள்ளி நிறத் திலிருக்கிறது. அவனது நீண்டு அடர்ந்த கலைந்த கேசம் தோள்களில் புரண்டு அவனை ஆணோ, பெண்ணா என்று சந்தேகிக்க வைக்கிறது. பயமற்ற. குழந்தைமை தோன் றும் முகம். பெண்ணின் முகத்திலோ வயதுக்கு மீறிய முதிர்ச்சியும், ஒரு முகமூடியின் பாவமும். சிரிப்பும் கேலி யும் இதமும் இவளிடம் தோன்றும் சமயங்களைத் தவிர மற்றப்படி இந்த முகமூடி பாவமே, இவள் முகத்தில் குடிகொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிலுக்குப் பின்னாடி. வெண்சுவரை ஒட்டி லிங்க வடிவுக்கு இருபுறமும் ஐந்து ஐந்து பேராக வரிசையில் உட்கார்ந்திருக்கும் பத்து நிழல் தோற்றங்கள். இவற்றின் மீது பூரணமாக ஒளி விழாதிருத்தல், இவை இருளுருவங்களாகத் தோன்றுகின்றன. ஆரம்பத்தில் கேட்ட கரகரத்த குரலைத் தொடர்ந்து பண்பட்ட இனிய பெண் குரலின் ஏகஸ்வரம் மீண்டும் ஸ்ருதியோடு இப்போது கேட்கிறது. ராகமாக மாறி ஏகஸ்வரத்துக்குத் திரும்பி மறைய அதன் இடத்தில் ஸ்ருதி ஓடும் சப்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

உருவங்களின் கோரஸ் : நக்ஷத்ரவாஸி!

ஒரு உருவின் குரல் : கேட்டாயா?

(ஏகஸ்வரம் ராகமாக மாறி மறைகிறது ஸ்ருதி.)

உருவங்களின் கோரஸ் : வித்யா

ஒரு உருவின் குரல் : பாடுகிறாள்!

(நக்ஷத்ரவாஸி உருவங்களைப் பொருட்படுத்தவில்லை. அவசரமாக முன்னே வந்து பெண்ணின் மூச்சை லேசாகக் குனிந்து பார்க்கிறான். உடனே ஸ்ருதி மறைகிறது. நக்ஷத்ரன் பெண்ணின் மூக்கில் புறங்கையை வைத்து அவதானித்தல். பிறகு அவளது கையொன்றைத் தூக்கி நிமிர்ந்து நின்று நாடி பார்த்தல். ஏமாற்றத்தோடு அவள் கையை விழ விடுகிறான். தலை குனிகிறான். உருவங்கள் குரூரமாகச் சிரிக்கின்றன. அவற்றின் சிரிப்புடன் ஸ்ருதி ஆரம்பித்து ஓடுகிறது. இப்போது உருவங்கள் மெதுவாக பக்கவாட்டாக வலமும் இடமும் ஒருமித்துச் சரிந்து சரிந்து ஆடியபடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உருவின் குரல் : கதை

கோரஸ் : தீர்ந்து விட்டது!

ஒரு உருவின் குரல் : கதை

கோரஸ் : தீர்ந்துவிட்டது!

ஒரு உருவின் குரல் : விளக்கங்கள்

கோரஸ் : தீர்ந்து விட்டன.

ஒரு உருவின் குரல் : விளக்கங்கள்

கோரஸ் : முதலைகள் மேட்டெருமைகள்.

ஒரு உருவின் குரல் : ஓநாய்கள் ஓணான்கள்

கோரஸ் : தீர்ந்து விட்டன.

ஒரு உருவின் குரல் : வித்யா தன் வாழ்க்கைக்கு தந்த விளக்கங்கள்

கோரஸ் : ஓநாய்கள் ஓணாண்கள் தீர்ந்து விட்டன.

ஒரு உருவின் குரல் : வித்யாவின் குரலுக்கு இனி

கோரஸ் : விடுதலை!

ஒரு உருவின் குரல் : எல்லாம் அழிந்தாலும்

கோரஸ் : எஞ்சுவது சங்கீதம்

(ஏகஸ்வரம் கேட்டு உடன் ராகமாக மாறுதல், ஸ்ருதி ஓடிக் கொண்டிருக்கிறது.)

ந.வா. : எங்கே இந்தக் கதை ஆரம்பிச்சுதுன்னே மறந்து போச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குரல் : ஓ! ஞாபகங்களைக் கிளறி அவற்றுக்குள் கண்ணாமூச்சி ஆடப்பார்க்கிறாயா?

குரல் 2 : போயும் போயும் வெறும் கதை ஒன்றிற்குள் தேங்கி நிற்க நினைக்கிறாயா?

கோரஸ் : நக்ஷத்ரவாஸி!

சங்கீதத்தில்

கரைந்து

மறைந்துவிடு!

த.வா. (பிணத்தைக் காட்டி) : முதலில் இதற்குப் பதில் வேண்டும். இது எப்படி ஆயிற்று? அதைத் தெரிந்து கொண்டுதான் வித்யாவைத்தொடர்ந்து போவேன்.

(குரல்கள் கலைந்து சிரிக்கின்றன)

ஒரு குரல் : (சிரிப்பினூடே) : வித்யாவை தொடர்ந்து!

(பெருஞ்சிரிப்பு)

கோரஸ் : வித்யா

நக்ஷத்ரவாஸியை

ஒரு குரல் : ஏற்றுக் கொள்ளவில்லை

(மௌனம், ஸ்ருதி மட்டும் ஓடுதல்)

ஒரு கீச்சுக் குரல் : ராவணனைத்தான் ஏற்றுக் கொண்டாள்.

(கலைந்த வலுவற்ற சிரிப்புக் குரல்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.வா. : ராவணன்! ஹ! ராமாயணமா என்ன இது?

கோரஸ் : சுற்றிச் சுற்றி

ஒரு குரல்: சுப்பருடைய கொல்லை!

குரல் 2 : ராமாயணம் போய், ராவணாயணம்!

(உருவங்கள் இப்போது பக்கவாட்டாக சரிந்து சரிந்து)

கோரஸ் : பத்துத் தலைகள்!

ஒரு குரல் : வித்யா வளர்த்த

விளக்கங்களினுள்

அசோகவனம்!

அசோகவனத்தில்

விளைந்திருக்கும்

கோரஸ் : பத்துத் தலைகள்

இருபது கைகள்! (கைகளை உயர்த்தல்)

(உருவங்களின் ஆட்டம் நிற்றல். கைகளைத் தணித்தல்)

ந.வ : (பரிகாசமாக) இந்தப் புராணத்தை ஏற்றுக் கொள்ள நான் தயாரயில்லை!

ஒருகுரல் : ஏன் ராவணாயணம் என்கிறபடியினாலா?

(ஏளனச் சிரிப்பு)

ந.வா. : சரி! அப்படீன்னு வச்சுக்கிட்டாலும் ஹனுமான்? ஹனுமான் எங்கே?

(உருவங்களின் சிரிப்பு ஒடுங்கி அவற்றின் கசமுச சப்தம். புரியாமல் தங்களுக்குள் பேசிக் கொள்ளுதல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகுரல் : (கனைத்து) அது சரி! ஹனுமான் இல்லாமல் ராமாயணமாவது ராவணாயணமாவது!

கீச்சுக்குரல் : ராமாயணமும் வேண்டாம் ராவணாயணமும் வேண்டாம். பொலீஸ் வைத்து விளையாடலாம்.

குரல்கள் : (சிதறி தனித்தனியே அங்கங்கே) ஆமா! ஆமா!

கோரஸ் : பொலீஸ் பொலீஸ்

ஒருகுரல் : நக்ஷத்ரவாஸி நீயும் சேர்ந்துக்க.

கீச்சுக்குரல் : நாங்கதான் பொலீஸாம்

ஒருகுரல் : கேள்வி கேட்போமாம். நீ தான் கொலையாளி யாம்!

ந.வா. : (சலிப்புடன்) கொலையாளி! நானா? அதை விடப் பெரிய போரடிக்கிற வேலை வேறே இல்லை? (கடுமையுடன்) ஹனுமானுக்கு என்ன ஆச்சு! அவன் சீதையைத் தேடி வந்திருப்பான்.

ஒருகுரல் : சீதா சீதாவாக இல்லை.

கீச்சுக்குரல் : இந்த ஹனுமான் சீதையைப் பெண்டாளற ஹனுமான்? ராமதூத ஹனுமான் இல்லே!

ந வா. : (தலையில் கை வைத்து கேசத்தை லேசாக பிய்க்கும் தோரணையில்) சீ!சீ!சீ! எல்லாமே குழம்பிடிச்சு! எல்லாமே குழப்பம்! குழப்பம்! ஒண்ணும் புரியலே!

(வெளியே கதவு தட்டப்படும் சப்தம். முதலில் வெகு தூரத்தில் கேட்பது போல், இரண்டாவது தடவை வெகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்தில், மூன்றாவது தடவை வெகு சமீபத்தில் கதவையே இடித்து. கதவு தட்டப்பட்டவுடன் ஸ்ருதி மறைந்து விடுகிறது.)

கீச்சுக்குரல் : ஹனுமான் வந்துட்டான்!

ஒரு குரல் : வந்துட்டானா? புராணத்தை ஆரம்பிக்க வேண்டியதுதான்.

குரல் : காவிய நாயகியைத் தயார் பண்ணு!

(இதற்குள் ந.வா. கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தல், அவன் வெளியே எட்டிப் பார்க்கும் போதே)

குரல்கள் : (சிதறலாக அங்கங்கே) சீக்கிரம்! சீக்கிரம்! உச்சாடனத்தை ஆரம்பிங்க! (குனிந்து தங்களுக்குள் ஒருவரை ஒருவர் பார்த்து) சீக்கிரம்.

கோரஸ் : (உருவங்கள் வேகமாகச் சரிந்து சரிந்து ஆடியபடி) சீதா சீதா சீதா சீதா சீதா சீதா சீதா சீதா சீதா.

(மூச்சின் எல்லையில் குரல்கள் மங்கிக்கொண்டு போதல். இதற்குள் வெளியே பார்த்த நா.வா. கதவைத் தாண்டி வெளியே மறைதல் உச்சாடனம் நடக்கும் போது வித்யாவின் கை, தலை முதலியன அசைகின்றன. வாய் மூடிக் கொள்கிறது. நிமிர்ந்து உட்காருகிறாள். உயிர் கொண்டு மெதுவாக எழுந்து நிற்கிறாள். அவற்றின் உச்சாடனம் ஒடுங்கி உருவங்களின் ஆட்டமும் நின்று விடுகிறது. அவற்றின் உச்சாடனம் ஒடுங்க வித்யா நிமிர்ந்து மூச்சை ஆழமாக இழுத்து விடுகிறாள். தன் இடப்பக்கத்து மார்பகத்தில் ஒரு கையை வைத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீசீலிக்கிறாள். மற்றதை அவளது அடிவயிற்றில் படிந்திருக்கிறது. திருப்தியோடு திரும்பி நாற்காலியைத் தூக்கி நிறுத்துகிறாள். பிறகு அதைத் தான் தூக்கியதை மீண்டும் பரீட்சிக்க அதை நிலத்திலிருந்து தூக்கி விட்டு மீண்டும் வைக்கிறாள். நாற்காலி சபையை நோக்கித் திரும்பியிருக்கிறது. அது முழங்கை தாங்கிகள் இல்லாத ஒரு நாற்காலி. அதன் பின் சாய்வுக்கு உறுதியான இரும்புக்குழாய்கள். இருக்கைக்குத் தகடு. கால்களும் உலோகத்தால் ஆனவை. வித்யா இருமிக் கனைத்துக் கொள்கிறாள். ஸ்டவ் மேஜைக்குப் போகிறாள். ஒரு டப்பாவைத் திறந்து ஏதோ பண்டத்தை எடுத்து வாயில் போடும் நிலையில் நிற்கிறாள். அப்போது உள்ளே ந வா. வருதல். வந்த நிலையில் அவனும், பண்டத்தை வாயில் போட்ட நிலையில் வித்யாவும்,)

ந.வ. : (குரலாக ஆரம்பித்து உள்ளே வந்தபடி) ஹ னு மா னா வ து ஒண்ணாவது! யாரையும் காணோம்.

கீச்சுக்குரல் : ஹனுமானைக் காணோமாம்.

குரல்கள் : (சிதறலாக) கதவைத் தட்டினானோல்லியோ? வருவான் வருவான்! புராணம் நடக்கட்டும்.

(வித்யாவும் ந.வா.யும் உறைந்த நிலையிலேயே நிற்றல், இரண்டு உருவங்கள், கண்ணாடிக்கு வலமும் இடமுமாக உள்ளவை எழும்புகின்றன. ஒரு உருவம் தனது இருக்கையிலிருந்து ஒரு கருப்புத் திரைத் துணியை எடுத்தல். அவ்வுருவத்தின் அருகிலுள்ள மூன்றவது ஒரு உருவம் கண்ணாடியின் முன் வந்து நிற்கிறது. மற்ற இரு உருவங்கள் மூன்றாவது உருவத்தையும் கண்ணாடியையும் மறைத்து கருப்புத் திரையைப் படித்தபடி தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கைகளில் ஏறி நிற்கின்றன. திரை நீக்கப்படுதல். உருவங்கள் தத்தம் இருக்கைகளுக்கு வருதல். நடுவே தொங்கிய நிலைக்கண்ணாடியில் இப்போது சிதறல் இல்லை. புதிய கண்ணாடியாக இருக்கிறது. ந.வா. கதவைப் பூட்டி விட்டு திரும்புதல். வித்யா டப்பாவி லிருந்து இன்னும் ஒரு பண்டத்தை எடுத்து வாயில் போடுதல், ந.வா. வித்யா நிலத்தில் கிடந்த இடத் தைப் பார்த்து அவளைக் காணாது தலையைக் கோதிய படி திரும்பிக் கண்ணாடியைப் பார்க்கிறான். கட்டிலின் மீதேறி கண்ணாடியைத் தடவிப் பார்க்கிறான். கட்டிலில் முழந்தாளிட்டு குதியில் உட்கார்ந்து தலையைக் கோதி விடுகிறான். பெல்ட்டை சரி பண்ணி ஊடே ஜிப்பாவை இழுத்து விட்டுக் கொள்கிறான். இதே சமயம் வித்யா மேடையின் இடப்புற மேஜைக்குப்போய் டிராயரைத் திறந்து ஒரு ரப்பரை எடுத்து கூந்தலை குதிரைவால் பாணியில் கட்டிக் கொள்கிறாள். மேஜையிலும், டிராய ருள்ளும், மேஜைக்குக் கீழும் எதையோ தேடி, மேஜைக்குக் கீழிருந்து கோர்க்கப்பட்ட சில காகிதங்களை எடுக்கிறாள் நிலத்தில் குந்திய நிலையிலேயே அதைப் பார்த்து விட்டு மேடை நடுவே முன் புலத்திலுள்ள நாற்காலிக்கு வருகிறாள். அவள் திரும்பி வரும்போதே ந.வா. கட்டிலின் மறுபக்கம் இறங்கி இப்போது கட்டிலுக்கும் கண்ணாடிக்கும் இடையே உருவங்களின் மத்தியில் சபையை நோக்கி நிற்கிறான். கட்டிலுக்கும் இப்புறம் வித்யா சபையை நோக்கி உட்காருகிறாள். சபையை நோக்கி நிற்கும் நாற்காலியில் அவள் சபைக்குப் பின் புறத்தைக் காட்டி உட்கார்ந்திருக்கிறாள். அவளது கால்கள் அகன்று நாற்காலியினது பின் சாய்வின் இரு புறங்களிலும் பிடித்திருக்கின்றன. கணுக்கால்கள் நாற்காலியின் கால்களைப் பிணைத்திருக்கின்றன. ஒரு கை பின் சாயலில் மற்ற முழங்கையை அந்தப் புறத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடை தாங்கி நிற்க, அக்கையில் கடிதம். வித்யாவின் உடல் திருகி முகம் பக்கவாட்டாக சபைக்குத் தெரிகிறது.)

ந. வா. : உன்னை எப்படி அட்ரஸ் பண்ணணும்?

வித்யா : (கடிதத்தைப் பார்த்தபடி பேசல். அவள் குரலில் ஒரு கரகரப்பு- அவலம். சங்கீதத்துக்கு இசையாததாக ஆரம்பத்தில் கேட்ட அதே ஆண் குரல்.) எப்படி வேணாலும் அட்ரஸ் பண்ணு...

ந. வா. : வித்யா?

வித்யா : (நிமிர்தல்) என்ன?

ந. வா. : உன் குரலா அது?

வித்யா : (மௌனம்)

ந. வா. : கடிதத்தைப் பூரா படிச்சுட்டு அப்புறம் உன் பதிலைச் சொல்லேன்.

வித்யா : அதுக்கெல்லாம் எனக்குப் பொறுமையில்லே வரிக்கு வரி சொல்லி விடுகிறேன். என்னை நீ பெட்டை நாய்யிண்ணு அட்ரஸ் பண்ணாகூட எனக்கு அக்கறை யில்லே.

ந. வா. : அப்படீன்னா உன்னைத் தேவதையே என்றுகூட அட்ரஸ் பண்ணி உன் மனசைத் தொடமுடியாதுங்கறே!

வித்யா : இந்தக் கடுதாசிலே என்னதான் எழுதிருக்கே?

ந. வா. : படி. (வித்யா கடிதத்துக்குக் குனிதல்) இன்னும் அடக்கி வைத்திருப்பதில் பயனில்லை. கொட்டித் தீர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடப் போகிறேன். நான் இந்தத் தேசத்தவனல்ல. சுமார் ஐந்து வருஷங்களுக்கு முன்பு என நினைக்கிறேன். தெற்கே வந்து இறங்கினேன். அது கடுங் கோடை. நிலமும் மரங்களும் வெறிச்சிட்டிருந்தன. (ஸ்ருதியின் ஒலி தூரத்தில் ஆரம்பித்து ஒடுகிறது.) தற்செயலாக நான் தங்கியிருந்த நகருக்கு அருகே இருந்த ஸ்தலம் ஒன்றைப் பார்த்துவரப் புறப்பட்டேன். * என் வாழ்க்கை அன்றுவரை வெறிச்சிட்ட கட்டாந் தரையாகக் கிடந்தது. ஆனால் அன்று மட்டும் என் மனதில் ஒரு இனந்தெரியாத நிம்மதி * தூரத்தே கோபுரங்கள் உதயமாகிப் பெருகி வளர்ந்து கொண்டிருந்தன. * இருளும் வெகு எளிதாகப் படர்ந்து விட்டது. * இருளினூடே உலகை நோக்கி நக்ஷத்ரங்களின் ஒளித் தோற்றங்கள் அசைவற்றுப் பொழிந்தன. * ஒரு குரல் கேட்க ஆரம்பித்தது. அக்கோவில் புராதனமானது. பிரகாரத்தில் நின்றிருந்த மனிதர்கள் தங்கள் மூடபக்தியின் அபத்தத்தை உணர்ந்து திடுக்கிட்டவர்கள் போல அசைவற்று நின்று கேட்டனர் * ஆயிரங்கால் மண்டபத்தில் ஒரு பெண் பாடிக்கொண்டிருந்தாள். கோவிலினுள் குடியிருந்த ஒரு அமானுஷ்யமான இருள் சிலை வடிவில் பெருமிதம் கண்டது * சங்கீதம் உருப்பெற்று ஒரு மனிதப் பெண்ணின் குரலாயிற்று. அவள் உருவை நான் காணவில்லை. இடம் பெயர்ந்து பெயர்ந்து குரலைத்தான் கேட்டேன். (*வித்யா நாற்காலியிலிருந்து எழும்புதல், ஒரு புறமாக தன் கால்களைக் கூட்டி ஒடுங்கி உட்கார்ந்தபடி கடிதத்தைப் பார்க்கிறாள். நக்ஷத்ரன் நிறுத்தி தொடர்தல்.*) அன்றுவரை கட்டாந்தரையாகக் கிடந்த என் வாழ்வின்மீது ஒரு ரகசியக் குரலின், சொற்களற்ற போதனை மலர்ந்ததைப் போன்று உணர்ந்தேன் * புரிந்து கொள்ள முயன்று, முடியாமல், மனம் அமைதி கொண்டது. * பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்துவிட்டது. திடீரென ஒரு முகில் தோன்றிப் பெரு மழை பெய்தது. அன்றிரவு நான் ஒரு விடுதியில் தங்கி னேன். இரவு முழுவதும் பெய்த அக்கோடை மழையில் உலகுமுழுவதும் நனைந்தது போன்று இருந்தது. * விடிந்ததும் நான் புறப்பட்டு விட்டேன். பகல் ஒளியில் கோவிலைப் பார்க்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்த என்னை இயற்கையின் தெளிவு வசீகரித்து இட்டுச் சென்றது. * நான் நெடுநாள் நிற்கவில்லை. திரும்பி விட்டேன். தொடர்ந்து என் பெற்றோரின் மரணங்கள் ஒன்றடுத்து ஒன்றாக * இருந்த சிறு சொத்தில் பாதியை யும் இழந்தேன். ஒரு அகில உலக பாஷனைப் பின்பற்றி னாற்போன்று என் தேசத்திலும் புரட்சி. மனிதன் தன் னைத்தானே சுட்டுத்தள்ளிக் கொண்டிருந்தான். இருந்த சொத்தை விற்றெடுத்துக் கொண்டு இங்கு வந்தேன். ஒரு அவசரத்தில் இருக்கும் பணம் கரையவென்று வாழ்கிறேன். நிம்மதி அடிக்கடி கலைந்து குவிகிறது.

வித்யா : (*நிமிர்தல். அவள் பேச ஆரம்பித்ததும் ஸ்ருதி அறுந்து மறைகிறது*) என்னைப் பற்றியும் இப்பவே சொல்லித் தீர்த்து விடுகிறேன். (*கடிதத்துடன் நாற் காலியிலிருந்து எழுந்து ஸ்டவ்வுக்குப் போகிறாள்; போய்க்கொண்டே*) எங்கப்பவும் அம்மாவும் ஆளையாள் சிண்டைப்புடிச்சு உலுப்பிண்டிருந்தா (*திரும்பி அவனைப் பார்த்து*) ...காபி சாப்பிடறயா?

ந. வா. : நான் காப்பி சாப்பிடறதில்லை. அது இருக்கட்டும் உன் குரல் ஏன் இப்படி ஒலிக்கிறது?

வித்யா : டீ?

ந. வா. : டீயும் சாப்பிடறதில்லே. ஆனால் கொடேன்!

வித்யா : நீ சாப்பிடறதில்லேன்னா வேண்டாம். சிகரெட் பிடிப்பையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. வா. : அதுவும் இல்லே.

வித்யா : (ஏளனமாக) ரொம்ப நல்லவனாருப்பே போலி ருக்கே! (திரும்ப நாற்காலிக்கு வருதல்).

ந.வா. : உங்கப்பாவும் அம்மாவும்......

வித்யா : (இப்போது நாற்காலியின் ஒரு புறமாகக் கால் களைக் கூட்டி உட்காருகிறாள். உடல் திருகி முதுகு சபைக்குத் தெரிகிறது. பின் சாய்வில் முகப்புறமாகச் சாய்ந்திருந்தது) ஆமா, நாங்க நாலு பொண்ணுங்க. நாந்தான் கடைக் குட்டி, இதாவது ஆம்பளையா வராதான்னு வேண்டியிருந்து நான் பொண்ணாப் பிறந்த தும் நான் பிறந்த உடனேயே அப்பா என்னைச் சபித் தாராம், அக்கா சொன்னாள். அப்புறம் நான் பெரியவ ளானதும் அம்மாகிட்டேருந்து இன்னொரு சாபம்! சரி தான், அப்பாவுமாச்சு அம்மாவுமாச்சின்னு படிச்சேன். இன்னும் ஒரு வருஷத்திலே என் Doctorateக்கு thesis எழுதிக் கொடுத்துடுவேன். போன வருஷமே என் ஸ்கா லர்ஷப் தீர்ந்து போய்ட்டது. இப்போ உத்யோகம் பார்க் கிறேனா? அப்பாவுக்கு என்னை வேண்டியிருக்கு. நான் இவரை ஏன்னு கேக்கறதேயில்லை.

ந.வா. : மனிதத் தன்மையின் சக்தி சிதறிப்போய் விட்டதா?

வித்யா : (எழுந்து வாதாடும் பாவத்தில்) என்னது? யாரைப் பத்தி சொல்றே? அப்பா மட்டும்...

ந. வா. : (இடைமறித்து) கடிதம் முடியலே.

வித்யா : (தணிந்து) ஓ! (கடிதத்துக்கு குனிந்து உட்காரல்)

ந. வா. : நிம்மதி அடிக்கடி கலைந்து குவிகிறது. மனிதத் தன்மையின் சக்தி சிதறிப் போய் விட்டதா? அல்லது ஆரம்பம் தொட்டே மனிதனிடம் இச்சக்தி தோன்றிச் சிதறியபடியேதான் இருக்கிறதா? * இத்தேசத்திலும் ஒரு மூலையில் மனிதன் தன்னை நோக்கித் தானே சுட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதைப் பார்த்தேன். இந்நிலையில்தான் போலும் பாதுகாப்பை நாடி, மனம் பந்தத்தை வேண்டி நிற்கிறது இந்நகருக்கு வந்தபோது ஒரு நண்பர் வீட்டில் உன்னைச் சந்தித்தேன். அந்த நண்பரைவிட நீ எனக்கு நெருங்கியவளாக தோன்றியது. மீதி உள்ள வர்களை நீயே எனக்கு அறிமுகம் செய்து வைத் தாய். முதலில் உன் உருவைத்தான் கண்டேன். ஒரு பத்து ஆண்கள் நடுவே நீ ஒருத்திதான் அன்று பெண். சிதறி நின்றும் இருந்தும் தோன்றிய அவர்கள் நடுவே நீ பேசும் பாவனையில் தலையையும் வாயையும் அசைத்துக் கொண்டிருந்தாய். உன் குரல் கேட்கா திருந்தால் உன் தலையசைப்பு... ஒரு பாடகியின் தலையசைப்பாகத் தோன்றியிருக்கும் * நீ பேசிக்கொண்டு நின்றாய். உன் பேச்சு உடைந்து கரகரத்த ஒரு ஆண் குரலிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தது * ஆரம்பத்தில் நீ சொல்வதில் அக்கறை கொள்ள விடாமல் உனது குரல் என்னை வழி மறித்தது * நீ பெண் விடுதலை பற்றியே பேசியபடி பத்து ஆண்கள் நடுவே நிற்கிறாய். அவர்கள் நீ சொல்வதில் தங்களது கீழ்த்தர திருப் திக்கே இடம் கண்டார்கள் போலிருந்தது. * நீ சொன்ன வற்றுடன் ஒரு மனதாக ஒப்புக்கொண்டனர். நீ சொன்ன வற்றை நான் அர்த்தம் கொள்ளத் துவங்கியதும் ஐந்து வருஷங்களின் முன்னால் கேட்ட ஒரு பெண்ணின் சங் கீதம் திருகி, உருக்குலைந்த ஒரு கோர நிழலென என் னுள் எழுந்தது. * அதிலிருந்து தப்பிவிட ஒரு ஆதரவை தேடினேன். என்னுள் அடிக்கடி குவிந்த நிம்மதி ஒரேயடி யாகச் சிதறி விட்டது. என்றோ கட்டாந்தரையாகக் கிடந்து மலர்ந்த நிலத்தில் தலையறுபட்ட பூக்கள் இன்று அலைக் கழிகின்றன. * ஏனென்று தெரியாமலே உன் மீது காதல் கொண்டு விட்டேனென்று தோன் றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்யா : காதல்! சை!

ந. வா. : வித்யா?

வித்யா : காதல் என்கிறதெல்லாம் ஒரு தந்திரம்.

ந.வா. : (சந்தேகத்தோடு உச்சரித்தது) காதல்... அன்பு... ஆமாம் தேய்ந்து போனவை. கொலை செய்யப்பட்ட வார்த்தைகள்.

வித்யா : கொலை செய்யப்படுவதுக்கு அந்த வார்த்தைகளில் உயிரே இருந்ததில்லை.

கோரஸ் : (ஏமாந்த பாவத்தில்) ஓ!

ந. வா. : (மௌனம்)

வித்யா : (கடிதத்தை கைவிடாமல் உதறிக் கொண்டே) விஸ்கி சாப்பிடுகிறாயா?

ந வா. : (அதிசயித்து) விஸ்கியா?

வித்யா : (எழுந்து நின்று பரிகாசமாகச் சிரிக்கிறாள்) மறந்தே போனேன். நீ நல்லவனாயிற்றே. அதிலும் தமிழன். காதலிக்கிற தமிழன். ஒரு தமிழ்ப்பெண்ணே உங்ககிட்டே விஸ்கி சாப்பிடுகிறாயா என்று கேட்கும் படியாச்சு. (சிரிப்பு) லோகம் கெட்டுப்போச்சி, இல்லே? குடிச்சுத்தான் பாரேன். இந்த காதல் கீதல் எல்லாம் இருந்த எடம் தெரியாமே பறக்கும்.

ந. வா. : வேடிக்கையாருக்கே?

வித்யா : எது?

ந.வா. : விஸ்கி குடிச்சா காதல் பறக்கும் என்கிறே! அது!

வித்யா : ஓ! நீ குடிச்சுப் பார்த்திருக்கையா?

ந. வா. : எப்பவாவது குடிப்பேன். எல்லாமே எப்பவாவது தான். உன்னைப் பார்த்துப் பேசின அன்னிக்கி சாயந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் குடிச்சேன். காதல் கீதல் ஒண்ணும் பறந்ததாக் காணோம். ஆனால் இப்போ...

வித்யா : (கொஞ்சம் தயங்கி) இப்போ......?

ந. வா. : இன்னும் ஒண்ணும் தோணலே! (மௌனம்) கடிதத்தைப்படி! (வித்யா உட்கார்ந்து கடிதத்தைப் பார்த்தல்), அன்று நீ மனிதர்கள் சொத்துக்களாக மாறுவதற்காகத் தயாரிக்கப்பட்டவர்களல்ல என்றாய். தானோ ஆழமற்ற கேளிக்கைகளுக்காகத் தயாரிக்கப் பட்டவனல்ல...

வித்யா : ஆழமற்ற கேளிக்கை என்று எதை நீ குறிப்பிடுகிறாய்?

ந. வா. : கடிதம் முடிந்து விட்டது.

வித்யா : (விறைப்புடன் பாதி கோபம்) ஆழமற்ற கேளிக்கை! அப்படி எதிலும் நான் ஈடுபடுவதில்லை)

(நக்ஷத்ரன் மௌனமாக நகர்ந்து கட்டிலின் தலைமாட்டுப் பக்கமாகச் சுற்றி அவளை நோக்கி வருகிறான்)

வித்யா : (அவன் காணும் போதே) காதலிப்பதற்குத் தவறுதலான ஆளைப் பிடித்திருக்கிறாய். (நக்ஷத்ரன் அவளுடைய தலையைவருட கைநீட்டி கையைநீட்டிய படியே நிறுத்துகிறான்) எனக்கு உணர்ச்சிகள் ஏதும் ஏற்படுவதில்லை. அப்படி ஏற்பட்டாலும் தற்காலிகமாகத்தான் இருக்கும். (அவன் நீட்டிய கையைத் தொங்க விட்டுத் தலையை மறுபுறம் திருப்பிக் குனிந்து கொள்கிறான்) உன் மீது எனக்கெதுவும் தோன்றவில்லை.

கோரஸ் : (ஏமாந்த பாவம்) ஓ!

ந. வா. : இதுதான் உன் பதிலா?

வித்யா : எழுதித் தரவேண்டுமென்கிறாயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.வா. : அதற்கல்ல (தாமதித்து) ஆழமற்ற கேளிக்கை எதிலும் நீ ஈடுபடுவதில்லை. ஆனால் உன் உணர்ச்சிகள் தற்காலிகமானவை. தற்காலிக உணர்ச்சிகள் ஆழமற்ற கேளிக்கைக்குத்தானே போகும்.

வித்யா : (எழுந்து கடிதத்தை வீசி எறிகிறாள். அது மேஜையின் கீழ் போய் விடுகிறது — எங்கிருந்து கடிதத்தை எடுத்தாளோ அங்கே) என்ன வேணாலும் சொல்லு. நான் மரத்துப் போயிருக்கிறேன். இப்போ அதுதான் என் நிலைமை... நீதான் விஸ்கி சாப்பிடு வேன்னியே, சாப்பிடலாமா?

ந. வா. : உன்னோடேயா

வித்யா : (சிரிக்கிறாள். சிரிப்பு அடக்கி) அசல் தமிழன் தான் நீ! ஒரேடியா திடுக்கிட்டுப் போயிடறே குடிக்கற யான்னதும்.

ந. வா. : எம்மேலே உனக்கு ஏதும் தோணாமே எப்படிக் குடிக்கக் கூப்பிடுவேன்னு கேட்டேன்...

வித்யா : (சமாதானம்) பிரண்ட்ஸ் கூட எல்லாம் நான் குடிப்பேன் (கையை நீட்டி) Shake hands. நாம பிரண்ட்ஸா இருக்கலாம்.

(நக்ஷத்திரன் அவளது கையைப் பற்றுகிறான். அவனது முகம் மறுபுறம் திரும்பிக் குனிகிறது. அவனது முகத்துக்குக் கீழே தன் உடலை வளைத்துக் குனிந்து அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்து)

ஏய்! கோவிச்சுண்டிருக்கையா. சிரி, பார்க்கலாம்.

ந. வா. : (நிமிர்ந்து கையை விடுவித்து பின்வாங்கி) எம் மேல உனக்கு எதுவும் தோணாமே ஏன் இப்படி விளை யாடறே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்யா : (அநாயசமாக, கைகளை விரித்து) என் பிரண்ட்ஸ் எல்லார்கிட்டேயுமே நான் இப்படித்தான் பேசுவேன்.

ந. வா. : (போலி ஏமாற்றம்) ஓஹோ?

வித்யா : (பெட்டிகளை நோக்கிப் போய்க்கொண்டு) என் பிரண்ட் ஒருத்தன் நேற்று விஸ்கி கொண்டாந்து கொடுத்தான். Duty free. (உட்கார்ந்து பெட்டியைத் திறந்து ஒரு பாட்டிலை எடுத்துபெட்டியை மூடுதல்.)

ந. வா. : Foriegnerரா?

வித்யா : (பாட்டிலை மேஜை மீது வைக்கிறாள். ஸ்டவ் உள்ள மேஜைக்குப் போய் இரண்டுகண்ணாடி டம்ளர்களை எடுத்துக் கொண்டு பாட்டில் உள்ள மேஜைக்கு வருதல். பேசியபடியே) இல்லே American Embassy லே அவனுக்கு ஒரு பிரண்டு. அவன் மூலமா எடுத்தது. இவனும் ஒரு American Citizenதான். ஆனால் Indian Origin. இங்கே பிலாசபி படிக்க வந்திருக்கான். டான்ஸ் விடுவான் நன்னா. (பாட்டிலைத் திறந்து ஒரே அளவு ஒவ்வொரு டம்ளரிலும் ஊற்றுதல், முதலியன...) அன்னிக்கு நாம் சந்திச்சப்ப உனக்கு Introduce பண்ணிவைக்கலே?

ந. வா. : அவன்பேரைச் சொல்லு. நினைப்பு வருதா பார்க்கலாம்.

வித்யா : பேரா? நர்த்தன். என் குரல் திரும்பக் கிடைச்சதும் நான் பாடுவேன் நர்த்தன் ஆடுவான்.

ந. வா. : (அதிசயித்து) உனக்குப் பாட வருமா? (ஒரு நீண்ட மௌனம் வித்யா அசைவற்று விறைத்த பாவத்தில் நிற்றல். ஸ்ருதியின் ஒலிகேட்டு ஓடுகிறது.) வித்யா உன் குரலுக்கு என்ன ஆயிற்று? (மௌன ஸ்ருதி) இடையிலே ஏதும் ஆச்சா? எப்பவும் உனக்கு இப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததில்லே. இல்லே? பிறக்கறப்பவே இப்படித் தானா?

வித்யா : (மேஜையைவிட்டு பின்வாங்கி பேச ஆரம்பித்ததும் ஸ்ருதி திடுக்கிட்டு நிற்றல்) ம்! எடுத்துக்க!

ந. வா. : (அசையாமல்) உன் குரலுக்கு ஏதும் தொந்தரவு இருந்தால் நீ குடிக்கக் கூடாது.

வித்யா : (கடுமையாக) எனக்கு நல்லது கெட்டதைப் பற்றிச் சொல்ல நீ யார்? (ஒரு டம்ளரை எடுத்து மடக்கென்று குடிக்கிறாள்.)

ந. வா. : (ஓரெட்டு முன் வைத்து) ஏய் mix பண்ணாமேயா குடிக்கறே?

(வித்யா டம்ளரைக் கையில் வைத்தபடி நிற்றல். அதே சமயம் பின்னால் உட்கார்ந்திருக்கும் உருவங்களுள் லிங்கத்துக்கு இடப்பக்கம் உள்ளது ஒன்று மெதுவாக எழும்பி நிற்கிறது)

வித்யா : எனக்கு எது நல்லது எது கெட்டது என்று எனக்குத் தெரியும்.

ந. வா. : உன் குரலைப் பற்றி அக்கறை வந்து ஏதோ சொன்னேன். நல்லது கெட்டதுங்கறதுக்காக இல்லே...

வித்யா : நீ குடிக்கமாட்டே? (முதல் டம்ளரை மேஜையில் வைத்துவிட்டு மற்றதையும் எடுத்துக் குடிக்கிறாள். சற்று தாமதித்து இரண்டாவது தம்ளரையும் மேஜையில் வைக்கிறாள். முதல் டம்ளரையும் மேஜையில் வைக்கிறாள். முதல் டம்ளரோடு இரண்டாவது டம்ளர் மோதுகிறது.)

ந. வா. : (முன்னே ஒரு எட்டு வைத்தல்) பார்த்து.

வித்யா : (அலட்சியமாக அவனைக் கையலைத்து) I can control myself.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ந.வா. 'த்ச்' என்றபடி திரும்பி ஸ்டவ் உள்ள மேஜைக்குப் போய் அதன் விளிம்பை பிடித்தபடி ஸ்டவ்வை நோக்கி குனிந்து நிற்றல்.)

வித்யா : என் குரல் திரும்பக் கிடைச்சதும் நான் பாடுவேன்.

கோரஸ் : நர்த்தன் ஆடுவான்.

(பின்னால் எழுந்து நிற்கும் உருவம் பூட்ஸ் கால்களை மேடையில் வாத்தியங்களை உதைத்து அதன் சுதிக்கு ஆடுகிறது. உருவத்தின் கண்கள் மட்டும் தெரிய தலை உடல் முழுவதையும் ஒட்டி மறைக்கும் கருப்பு உடை வித்யாவினதைப் போன்ற கருப்பு ஜீன்ஸ். ஆனால் ந.வா.வின தைப் போன்ற நீலநிற பெல்ட். வெள்ளி நிறக் கோர்வையுடன் வித்யாவும் நா.வா.வும் உறைந்த நிலையிலே நிற்றல். உருவம் ஆடியபடி கட்டிலை நோக்கி சுற்றி வருதல். இப்போது வித்யாவின் பின்னால் உறைந்து சற்று நிற்கிறது.)

வித்யா : அவன் ஸ்பானிஷ் டான்ஸ் ஆடுவான். இல்லேன்னா லத்தீன் அமெரிக்கா நடனம் ஆடுவான், நான் இந்திய சங்கீதத்தில் பாடுவேன்.

கோரஸ் : நர்த்தன் ஆடுவான் (உருவங்கள் நடனத்துக் கேற்ப கைகளைக் கொட்டுதல், மீண்டும் உருவம் ஆடிப்பாடி இப்போது நாற்காலியை சுற்றி,வந்த வழியே திரும்பி இருந்த இடத்தில் போய் நிற்கிறது.)

ந.வா. : சும்மா பேசிண்டிருக்காதே வித்யா (திரும்பி) பாடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரஸ் : பாடு

ந.வா. : சாதகம் பண்றதையே விட்டுட்டு உன் சுதந்திரத்தை மத்தவர்களுக்கு காமிக்கிறதுக்காக குடிச்சுக் குடிச்சு குரலைக் கெடுத்திருக்கே. சங்கீதம் போயிடுச்சு. (இதமாக) பாடு. பாடிண்டே இருந்தா குரல் தானே திடீர்னு வெளிச்சாலும் வெளிக்கும். அப்புறம் நீ சுதந்திரத்தைப் பற்றி வெறுமனே பேசிண்டிருக்க மாட்டே......(ஸ்ருதி லேசாகக் கேட்டு மங்கி மறைதல். மௌனம்)

ந.வா. : (யோசனையுடன்) எல்லா வகையிலுமே சுதந்திரம் கிடைச்சுட்டா அதை அனுபவிக்கத்தான் வேளை இருக்கும்.

வித்யா : என் விடுதலையை நான் அனுபவிச்சுட்டுத்தான் இருக்கேன். அது தானாகவே வெளிலே பிறத்தியாருக்கு தெரியறது. சுதந்திரத்தைப் பற்றி பேசறதும் சுதந்திரத்திலே ஒரு அம்சம்தான். நீ ஒண்ணும் எனக்கு உபதேசிக்க வேண்டியதில்லை...

(மௌனம். பின்னாடி நிற்கும் உருவம் மெதுவாகத் தனித்து உட்காருதல்; வித்யா லேசாகத் தள்ளாடுகிறாள்.. குரல் விசும்புகிறது.) என் குரல்......(அவள் குரல் விசுமுகின்றது. திடீரென சமாளித்து, முந்திய நிதானத்தோடு உடலும் திடுக்கிட்டு நிதானமடைய விறைத்து நிமிர்ந்து நிற்கிறாள்,)

ந.வா. : (இதமாக) வித்யா. (மௌனம்) பாட முடியாவிட்டால் அழவாவது வேணும். அழுகையையே அடக்கிடறயே. சுதந்திரம்னா அழகூட முடியணும்... நீ ஆண்களை இமிட்டேட் பண்றதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் விடுதலைன்னு நினைக்கிறே. ஆண்களினாலே பெண்களைப் போல அழ முடியாது. அழவே அழ முடியாதுன்னா சித்த சுவாதீனம் குறைச்சல்னு அர்த்தம். தெரியுமா? (கதவு தட்டப்படுகிறது. இதை இருவரும் கவனிக்கவில்லை.)

உருவங்கள் : (சிதறலாக குரல் மாறி குரல்) ஹனுமான், ஹனுமான் ஹனுமான்.

வித்யா : உன் முன்னாடி அழுவானேன்னு அடக்கிட்டேன். அழுதேன்னா என்னைத் தொட்டு ஆதரவு காமிப்பே. அப்படியே என் உடலை ஏமாத்தி உன் வழிக்கு இழுத்துண்டு போயிடுவே.

ந.வா. : (ஏளனமாக) என் வழிக்கா?

வித்யா : உன்னைச் சொல்லலே. பொதுவா ஆண்களைப் பற்றி சொல்றேன். ஆண் தான் பெண்ணைக் காப்பாற்ற முடியும். மன ஆறுதல் கொடுக்க முடியுங்கறதை வச்சுத்தானே சினிமாவிலே வர்ற வீரதீர கதாநாயகன்களே பிழைச்சுக்கிட்டு இருக்கிறாங்க... (கதவு முன்னைவிட பலமாகத் தட்டப்படுதல். வித்யா கதவைத் திறந்து பதினேழு பதினெட்டு வயது மதிக்கத் தக்க ஒரு இளைஞனை உள்ளே விடுகிறாள். இவன் ஒரு காக்கி பாண்டும் சிவப்பு ஷர்ட்டும் அணிந்திருக்கிறான். உடலுழைப்பைக் காட்டும் தோற்றம். உடலுழைப்பினால் ஜீவனம் செய்பவனின் அங்க சேஷ்டைகள். முகத்தில் அறிவு குறைவாயினும். ஒருவித தீவிரம். அவன் கையில் ஒரு கருப்பு பாண்டைமடித்து வைத்துக் கொண்டிருக்கிறான்.)

வித்யா : நாகன். நீயா? துணியெல்லாம் கொண்டாந்தையா? இதென்ன பாண்டா? என்னுதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவங்கள் : (சிதறலாக) ஹனுமானில்லே, வண்ணான். ஆமாமா இது வண்ணான்.

(வித்யா, ந.வா. நாகன் மூவரும் உறைந்த நிலையிலே நிற்றல்.)

ஒரு குரல் : வண்ணான்னா சும்மாவா? ராம ராவண யுத்தம் முடிஞ்சி மீட்சிப்படலம். மீட்சிப்படலம் முடிஞ்சி பட்டாபிஷேகம். பட்டாபிஷேகம் முடிஞ்சி என்னாச்சி?

குரல் 2 : என்னாச்சி?

ஒரு உருவம் : (எழுந்து நின்று மேடைப் பேச்சு தோரணையில்) ராவணன் சீதையை பலாத்காரமாக ஏதும் செய்திருக்க முடியாது என்பதற்கு என்ன ஆதாரம்? சீதையின் பிரியமில்லாமல் அவளைத் தீண்டினால் ராவணன் பஸ்பமாகிவிடுவான் என்பதும் பின்னாடி அவள் கற்பைச் சோதித்த ராமன் சீதையை நெருப்பிலிறக்கியும் அவள் எரிந்து போகவில்லை என்பதும் எமது நவீன பார்வையில் அபத்தமாகப்படுகின்றன. (உட்காருதல்)

ஒருகுரல் : அதிலும் இருக்குதொரு

கோரஸ் : ஞாயம்!

ஒருகுரல் : அயோத்திலே இந்த நவீன பார்வை அன்னிக்கே இருந்திருக்கும்!

குரல் : ராவணன் கொண்டுக்கிட்டுப் போன சீதையை திரும்பக் கொண்டாந்து வச்சிருக்கானே அந்தக் கேடுகெட்டராமன், அவனைப்போல என்னை நெனைச்சயாடி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குரல் : அப்படின்னான் ஒரு

கோரஸ் : வண்ணான்.

ஒரு குரல் : அதிலும் இருக்குதொரு

கோரஸ் : ஞாயம்!

ஒரு குரல் : லங்கைக்கு ஞாயம் ஒரு ஹனுமான்.
அயோத்திக்கு ஞாயம் ஒரு வண்ணான்.

நாகன் : பாண்ட் (பாண்டை நீட்டி) ஆமா உங்களது! (ந. வா.வைப் பார்த்து சங்கடப்படுகிறான்) துணியெல்லாம் கொண்டாந்தேன். இல்லே கொண்டாரல்லே. உலர்ந்ததையெல்லாம் லாண்டரிலே போட்டுட்டுவரேன். இஸ்திரி போடறாங்க. இதையாச்சும் வழிலே குடுத்துட்டுப்போலாம்னு......

(ஒரு கையை மடித்து மறுகையால் பிடறியைச் சொறிகிறான். உடன் சுதாரித்து கௌரவமான பாவனையில் நிற்கிறான். வித்யாவையும் நக்ஷத்ரனையும் மேஜையிலிருக்கும் பாட்டில் டம்ளர்களையும் மாறி மாறிப் பார்க்கிறான்.)

வித்யா : (பாண்டை உதறி ஒரு எரிச்சல் கலந்த பாவத்தில்) இது மட்டும் தானா? நன்னா இஸ்திரி போட்டிருக்கா? ஏன் நாளைக் காலம்பர எல்லாத் துணியையும் ஒண்ணாக் கொண்டாந்திருக்கலாமே!

(நாகன் ஒரு திடீர் முரட்டுதனத்தோடு எட்டி பாண்டை வித்யாவின் கையிலிருந்து பிடுங்குகிறான். வித்யா பாண்டைக் கொடுப்பதுபோல் கைவிட்டபடி திரும்பி ந. வா.வை ஒரு அரை பார்வை பார்த்து மீண்டும் நாகன்பக்கம் திரும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல். ந.வா. நிமிராமலே தலையை லேசாக சரித்து ஒரு கையை நாற்காலி பின்சாய்வில் வைத்தபடி நின்று யாவற்றையும் கவனித்தல்.)

நாகன் : (சுதாரித்து) **ஆமாங்க எல்லாத்தையும் நாளைக்கே கொண்டாரேன். இதுக்கு கூட நன்னா இஸ்திரி விழலே. கிரீஸ் நன்னால்லே.** (ஒரு படபடப்போடு பாண்டை ஆராய்கிறான். வார்த்தை சுதாரித்தாலும் படபடப்பு அடங்கவில்லை. பாண்டை தன் இடையோடு சேர்த்துப்பிடித்து குனிந்து பார்க்கிறான். திடுக்கிட்டு தன் செய்கையையே மறைப்பவன் போல் பாண்டை தனக்குப் பின்புறமாக மறைத்து நிற்கிறான். தலையைச் சொறிகிறான்.)

வித்யா : (முகத்தை வெடுக்கென்று திருப்பி கடுமையாக) **ஏய் நாளைக்கே டிரஸ் எல்லாத்தையும் கொண்டார முடியுமா இல்லியா?**

நாகன் : (தயங்கி) **சரிங்க நாளைக் காலையிலே பார்த்துக் கலாங்க.**

வித்யா : (அதே கடுமையாக) **சரி போ!**

(வித்யா 'சரி போ' என்றவுடன் ந.வா. சட்டெனத் திரும்பி ஸ்டவ் மேஜைக்குப் போகிறான். வித்யா அவனை திரும்பி பார்த்தல். நாகன், பாண்டுடன் பின்வாங்கிக் கதவிற்கு வெளியே ஒரு காலை வைத்துத் தாமதிக்கிறான். ந.வா. ஸ்டவ் மேஜையில் உள்ள டப்பாவிலிருந்து ஒரு பண்டத்தை எடுத்து வாயில் போடுதல்)

வித்யா : ஏதேது. **வடாத்தை கண்டு பிடிச்சிட்டே போலிருக்கே?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.வா. : (திரும்பாமலே) உனக்கும் வேணுமா வடாம்? வறுத்தா இன்னும் நன்னாருக்கும். எங்கேருந்து கொட்டிண்டு வந்தே? (மேஜையை ஆராய்தல்)

(வித்யா ஸ்டவ் மேஜையை நோக்கி வருதல். இப்போது வித்யா, ந. வா. ஆகிய இருவரது பார்வையும் மேடையின் நடுப்புறம் கட்டில் கதவு ஆகியவற்றைக் காணாதிருக்கும் சமயம். கதவு திறந்தபடி இருக்க, கட்டிலில் பாண்டைப் போட்டு விட்டு நாகன் கட்டி லின் கீழே பதுங்கிக் கொள்கிறான்)

வித்யா : எங்கே? (ந. வா. டப்பாவை நீட்டுதல், அவள் ஒரு வடாத்தை எடுத்துச் கொரித்தபடி) என் பிரண்டு ஒருத்தர் இருக்கார். ஹோட்டல் வச்சிருக்கார். அவரோட wifeஐக்கூட எனக்குத்தெரியும். அவளுக்குத் தெரியாமே கொட்டிக் கொடுத்தார். (கொரித்தல், பாதி வடாத்தை ந.வா. முகத்தில் சுண்டி) ஆமா அன்னிக்கு அவருகூடத் தான் அங்கேருந்தாரே. Introduce பண்ணேனே? (கொரித்தல்) வறுக்காமலே இது பூரா தின்னுடுவேன். (நக்ஷத்ரனை டப்பாவோடு நெருங்கி) எடுத்துக்க (வித்யா தன்னை எடுத்துக் கொள்ளக் கூறும் உடல் அசைவும் பாவமும்)

ந. வா. : போறும்? (கட்டிலுக்கும் அவளுக்குமிடையே அவளைத் தீண்டாதவாறு விலகி மேடை நடுவுக்கு வருகிறாள்.)

(வித்யா டப்பாவை மேஜையில் வைத்துவிட்டு ஸ்டவ் மேஜையை ஒழுங்குபடுத்துதல். ந.வா. கட்டிலில் கிடக்கும் பாண்டைக் கவனித்தல். வித்யாவை நோக்கித் திரும்பிவிட்டு, பாண்டை எடுத்துப் பார்த்து யோசிக்கிறான். சட்டென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்திருக்கும் கதவுக்கு வேகமாகவந்து வெளியே எட்டிப் பார்க்கிறான். பிறகு தலையைக் கோதிய படி, திடீர் யோசனையில் உடல்திடுக்கிட திரும்பி முழங்கால் மடிய கட்டிலின் கீழே பார்க்க லேசாகத் தணிந்துவிட்டு பார்க்காமலே நிமிர்ந்து வித்யாவை பார்த்தபடி பின்புறமாக கட்டிலின் அடியில்பாண்டை விசுகிறான். வித்யா திரும்பியதும் பாட்டில் உள்ள மேஜைக்குப் போய் விஸ்கி பாட்டிலைத் தூக்கி லேபலைப் பார்க்கிறான்.)

வித்யா: (வேடிக்கையாகக் கைகளை உதறி) ஐயய்யோ! தமிழன் பாட்டிலைத் தூக்கிட்டான்.

ந. வா. : ஏய் என்னது கலாட்டா? (தனக்குத் தானே பேசும் குரலில் பாட்டிலை உருட்டிப் பார்த்தபடி) Duty freeன்னயே, ஸ்பெஷல் ஸீல் இதுவா? ம்ம்ம்...... குடிக்கலாமான்னு தேணுது. (மூடியைத் திறத்தல்)

வித்யா: (ந. வா. ஒரு டம்ளரில் விஸ்கியை ஊற்றுவதைக் கூர்ந்து பார்க்கும் பாவனையில் சற்றே குதித்து) ஐய! தமிழன் விஸ்கியை டம்ளரிலே ஊத்தறான்!

(டம்ளரில் பாதிக்குமேல் சுமார் இரண்டரை அளவு ஊற்றியபின் பாட்டிலை மூடி வைத்து விட்டு டம்ளரைத் தூக்கி உயர்த்தி திராவகத்தின் இளஞ்சிவப்பு ஒளியைப் பார்க்கிறான்)

வித்யா: (கைகளை உதறிக் குதித்தபடி) ஐயய்யோ...... தமிழன்...

ந. வா. : ஏய்! நிறுத்து! குடிக்கறப்ப என்ன கலாட்டா? (டம்ளரைக் காட்டி) இந்தக் கலரைப் பார்த்தாயா? ஏதோ ஒரு பூ ஞாபகம் வரல்லே? என்ன பூ அது? இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னறதைப் பாரு! (சிரித்து தலையை ஆட்டி) அ......
பூ இல்லே. ஒரு ஜுவலரி ஷாப்லே பார்த்த புஷ்பராகக்
கல்லு! (லேசாக அருந்துகிறான். வித்யா வேடிக்
கையை விட்டு வந்து அவனைக் கவனிக்கிறாள்)
Thats right கரகரன்னு நாக்கு குரவளை எல்லாத்தை
யும் நொறுக்கிட்டு போவுது.

வித்யா : mix பண்ணலே? தண்ணி கொஞ்சூண்டாவது விட்
டுக்க... முதல் தடவையா குடிக்கிறவன்மாதிரி விஸ்கியை
பார்த்து பேத்தறயே!

ந. வா. : எல்லாமே எப்பவுமே முதல் தடவைதான்.
(லேசாக அருந்துகிறான். மேடை நடுவே உள்ள நாற்
காலியில் கால்மடித்துவைத்து நின்று அருந்துகிறான்)

வித்யா : (லேசான வெட்கத்தோடு) அப்பவே சொல்ல
நினைத்தேன். டம்ளரைக் கழுவாமலே என் எச்சலோடே
குடிக்கறே.

ந. வா. : அட உனக்கு வெட்கம் கூட வரதே! அப்ப
டீன்னா பெண் விடுதலை உனக்கு கெடைக்கலே! (டம்
ளரை நாற்காலியில் வைக்கிறான்.)

வித்யா : Nonsense. பெண் விடுதலைன்னா, பொம்பளை
யெல்லாம் ஆம்பளையாயிடறதுன்னா அர்த்தம்? எங்
களுக்குப் பொருளாதார சுதந்திரம் வேணும். வேலை
வேணும். கல்யாணத்தை ஒரு கையிலும், ஒரு உத்தி
யோகத்தை இன்னொரு கையிலும் வச்சுக்கிட்டு இது
ரெண்டுலே எது வேணும்னு கேளு!

ந. வா. : (சுவாரஸ்யமாக, இரண்டு வெறுங்கைகளை
யும் ஏதோ வைத்திருப்பது போல் நீட்டி நின்று) ம்,
எதுவேணும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்யா : உத்யோகம்தான் வேணும்!

ந. வா. : (நீட்டிய கைகளை சிலுவையில் அறைந்த மாதிரி வைத்து உடலையும் அதே பாவனையில் தளர்த்தி, நாற்காலியிலிருந்த காலை நிலத்தில் நிறுத்தி) அப்படீன்னா உலகம் என்கிற சிலுவையைத் தூக்கற பொறுப்பும் உனக்குத்தான். (நிமிர்ந்து, டம்ளரை எடுத்து அருந்தியபடி) இத பாரும்மே! நான் வேலை தேடற ஆம்பளை இல்லே. உனக்குப் போட்டியா நான் நிக்க மாட்டேன். கையிலே இருக்கதை கரைச்சுட்டு தூக்க மாத்திரையைப் போட்டுடுவேன்.

வித்யா : சீ! என்ன உளர்றே?

(மௌனம் ந. வா. டம்ளருடன் நிற்றல், லேசாக தூரத்தில் ஸ்ருதியின் ஓட்டம். ஸ்ருதி மறைதல்.)

ந. வா. : ஆம்பளைங்கறதுக்கு ஒரு அர்த்தம் அகம்பாவம் அந்த அர்த்தத்தை அவன் துறந்தான்னா... அவன்தான் கடவுள்! (மௌனம், ந.வா. லேசாகத் தள்ளாடுதல், சமாளித்துக் கொள்கிறான்.) ஆம்பளைன்னாலே அது ஒரு அர்த்தம் — ஆம்பளைன்னா அகம்பாவம். தற்கொலை செய்துக்கறதுக்கு இந்த அகம்பாவம் இருக்கணும். உனக்கு இடத்தைக் கொடுத்துட்டு நான் மறையத்தயார். ஆனால் ஆம்பளைங்கறவன் லேசிலே மறையமாட்டான் * உன்னை புரிஞ்சுகிட்ட மாதிரி பாவனை பண்ற ஆம்பளைங்க உன் சுதந்திரத்தை புதிய வேட்டை ஒன்றுக்குக் கிடைத்த கானகமாகப் பார்க்கிறாங்க * கல்யாணம் பண்ணிண்டா பெண் ஒரு கௌரவமான மிருகமாக வாழ்கிறாள்.

வித்யா : ஆமா! கரெக்டா சொல்றே.

ந. வா. : நீயோ கௌரவம் கூட இல்லாத மிருகம்! (அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடுக்கிட்டு வாதத்துக்கு தயாராக, அவளை இடைமறித்து) சுதந்திரம்னா எதையும் ஒரு ஹ்ருதய பூர்வமான புத்தியாலே பார்க்கறது. மனம்போன மாதிரி வாழ்கிறதல்ல.

வித்யா : (மௌனம்) என்னமோ சொல்றே! (தலையை சொறிகிறாள். இதில் நாகன் தலையைச் சொறிகிற பாவனை தெரிகிறது.) த்ச! உங்கூடப் பேசறதுன்னா நானும் இன்னொரு peg போடணும்! (ஏதோ நினைவு வந்து) அ! எல்லாமே எப்பவுமே முதல் தடவைன்னயே உனக்கு காதல்?

ந. வா. : (அதிசயித்து) அ?

வித்யா : (மௌனம்)

ந. வா. : (டம்ளரை நாற்காலில் வைத்தல்) என் காதல்களைப் பற்றி கேட்கறயா? (சுவாரஸ்யமாகக் கைகளைத் தேய்த்துக் கொள்ளுதல்) yea, என் முதல் காதல். என் முதல் காதல்லே ஒரு தமிழ்த்தனம்தான் இருந்தது. இப்ப வந்தானே லாண்டரி பையன் அவன் வயது எனக்கு அப்போ! அவன் பேரு என்ன சொன்னே? நாகன்? நாகன்! நாகன் வயது இருக்கப்ப!

வித்யா : உனக்கு பல காதல்கள் வந்திருக்கிறதுன்னு சொல்லு. Probably you fall in and out of love very often.

ந. வா. : இதுக்கு முதல் இரண்டேதான், இப்போ முப்பது வயது தாண்டிட்டேன். அதுக்குள்ளே ரெண்டே ரெண்டு தான். கேக்கறயா?

வித்யா : சொல்லு!

ந.வா. : அவள் ஸ்கூலுக்குப் போவாள். அந்த வேளை பார்த்து நானும் புறப்படுவேன். தெருவில் அவளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பது, அப்போது அவள் என்னைப் பார்த்துப் புன்னகை செய்கிறாள்னு பிரமை கொள்ள வேண்டியது ஒரு முக்கியமான சடங்கு. இந்த பிரமை கிடைக்காவிட்டால் அவளது அலட்சியம் கடுமையாக இருந்து விட்டால், அடுத்த பிரமைவரை தவிப்பு. தவிப்பு என்றால் விரக தாபம் மாதிரி. (விஸ்கியை எடுத்து அருந்துகிறான்) அதாவது, தலைவாரிக் கொள்ளக் கூடாது. டீச்சரிடம் திட்டு வாங்கும்படியான ஒரு அசிரத்தை. நண்பர்கள் ''என்னடா என்னடா'' என்று கேட்கும் படியான ஒரு வெறிச்சிட்ட பாவம்! இதெல்லாவற்றையும் வெற்றிகரமாகச் செய்தேன். ஆனால் அவளுடன் பேசுவதுக்கு மட்டும் முயற்சிக்கவில்லை.

வித்யா : பலே! பண்பாடுன்னா, பண்பாடு !ம்?

ந. வா.: நான் இந்த உலகத்திலே இருந்து வந்ததே அவளுக்குத் தெரிந்திராது அப்டீன்னு அப்புறமாத்தான் தோணித்து. இப்போ அவள் ஒரு லாயர் பையனைக் கல்யாணம் பண்ணி இருக்கிறாளாம். * என் இரண்டாவது காதலைப் பற்றிக்கேட்கிறாயா ?

வித்யா : (டப்பாவை எடுத்துத் திறக்கிறாள்) Go on.

ந. வா. : என் இரண்டாவது காதல் இந்த முதல் காதலுக்கு எதிரிடையானது. பயங்கரம் என்னவென்றால் அசல் அமெரிக்கத்தனமானது. (வித்யா ந. வா.வுக்கு கிட்ட வந்து டப்பாவை நீட்டுதல். அவன் ஒரு வடாத்தை எடுத்துக் கொரித்தல்) அவளே ஒரு அமெரிக்கப் பெண் தான். (வித்யா டப்பாவை நாற்காலியில் வைத்தல்)

வித்யா : என்னது?

ந. வா. : அமெரிக்காவுக்குப் போன ஒருத்தன் கல்யாணம் பண்ணி அழைச்சுண்டு வந்து பக்கத்து வீட்லே குடியிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். (வித்யா பாட்டில் உள்ள மேஜைக்குப் போய் பாட்டிலை எடுத்து திரும்பி அவனை நோக்குதல்)

வித்யா : பரவாயில்லியே உன்பாடு. என்ன பண்ணே?

ந. வா. : பண்றது பண்ணாததுலே என்ன இருக்கு! we were in love!

வித்யா : (பாட்டிலை உயரத்தூக்கிக் குலுக்கி) காதலிக்கிற மாதிரி நடிச்சு உன்னை செக்ஸுக்கு உபயோகிச்சிருப்பா. நீதான் அரோகரான்னு அவளைக் காதலிச்சிருப்பே!

ந. வா. : அவளும்தான் என்னை அரோகரான்னு காதலிச் சாள்!

வித்யா : நடிச்சிருப்பாள், காதலிக்கிற மாதிரி. உண்மையில் உன்னை use பண்ணியிருப்பாள்.

ந. வா. : நடந்தது முழுவதும் சொல்றேன் கேளேன்.

வித்யா : நடந்தது முழுதையுமா? ஐய!

ந. வா. : (சலித்து) த்ச! இதை உன்னாலே அசிங்கமாக் கிட முடியாது. கேளு... எங்கள் காதலை அவள் தன் கணவனுக்கு மறைக்க முயற்சிக்கலே.

வித்யா : (பாட்டிலை மேஜையில் தட்டென வைத்தல்) அவ கணவனுக்கே மறைக்கலையா? (மௌனம்) நீ அப்போ ஏதும் கார் கீர் வச்சிருந்தையா ?

ந. வா. : சே! நாங்கல்லாம் நடைராஜாக்கள். படிச்சுட்டிருந் தேன். ஓலை வீடு. எங்கப்பா புகையிலை வித்துக்கிட்டு இருந்தார். அவள் புருஷனோ Engineer. But she respected me.

வித்யா : (பாட்டிலைப் பார்த்தபடி மெதுவான குரலில்) அவட்டே என்ன பேசுவே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. வ. : ஞாபகமில்லே என்னென்னத்தையோ பற்றியெல் லாம் பேசுவோம்.

வித்யா : (பாட்டிலை எடுத்து அணைத்தபடி) ஏதும் விஸ்கி கொடுத்திருப்பாள். அதைப் பார்த்து புஷ்பராகம் மாதிரி இருக்குன்னு உளறியிருப்பே.

(மௌனம். மௌனத்தினூடே ஸ்ருதி தூரத்தே கேட் கிறது. அவள் அவனைப் பார்க்கவில்லை. அவள் முகம் குனிந்து மேஜைப்புறம் திரும்பியிருக்கிறது. ந வா. டப்பாவிலிருந்து ஒரு வடாத்தை எடுத்து அவள் மீது வீசியெறிய யத்தனித்து பாதியில் நிறுத்தி அதைக் கொரிக்கிறான். ஸ்ருதி மறைகிறது.)

வித்யா : அவள் தன் கணவனுக்கு ஒன்றையும் மறைக்க லேன்னு உனக்கெப்படித் தெரியும்?

ந. வா. : ஒருநாள் அவள் புருஷன் தன் வீட்டு வாசல்லே நின்னு தெருவிலே போயிண்டிருந்த என்னைக் கூப்பிட் டான். * உள்ளே போனேன். அவள் முன்னாடி என்னை நிறுத்தி என்னைப்பத்தி விசாரிக்கிற மாதிரி கேள்வி கேட்டான். என் வயதைக் கேட்டான். உத்யோக முண்டான்னு கேட்டான். ஒரு பெண்ணை வச்சி என் னாலே காப்பாத்த முடியுமான்னு கேட்டான். நான் அதுக்கு பதில் சொல்லலே * அவள் என்னை பதில் சொல்ல விடலே. புருஷன்கிட்டே சண்டைபோட ஆரம் பிச்சா * எங்கிட்டே பேசறதுக்கு அவனுக்கு தகுதியில் லேன்னா!

(மௌனம் வித்யா பாட்டிலை கன்னத்தோடு வைத் துக் கொள்கிறாள்; மேஜையில் வைக்கிறாள்.)

வித்யா : ம். அப்புறம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.வா. : நான் வெளியே வந்துட்டேன்.

வித்யா : ஹ! புருஷன் உங்க விஷயத்தை எப்படியோ கண்டு பிடிச்சிருக்கான். அப்புறம் இது நடந்திருக்கு. இல்லே?

ந. வா. : அதில்லே விஷயம்! அவன் சந்தேகப்படறதுக்கு என்ன காரணங்கறதுதான் விஷயம். எங்கிட்டே உறவு வந்த பிறகு கணவன்கிட்டே படுத்துக்கறதே நடத்தைக் கேடுன்னு அவளுக்குப் பட்டிருக்கு... அதிலேருந்துதான் அவன் சந்தேகம். என்னை அவள் உபயோகித்திருந்தால் இந்த நிலைமை வந்திராது. கணவனை சுலபமாக ஏமாற்றியிருப்பாள்... எல்லாமே சௌகரியமாக இருந் திருக்கும் * ஆனால் அவளுக்கு ஹிருதயம் சுதந்திரமாக இருந்தது. எனவே கணவனை ஏமாற்றலே. அதனாலே நிலைமையை அசௌகரியமானதா ஆக்கிட்டா. சௌகரி யத்தை உண்டாக்கிக்கிறதல்ல சுதந்திரம். நமக்கு சுதந் திரம் இருந்தால் அது நமது சௌகரியத்தையே பாதிக் கும்... அவளுக்கு சிறகு கெடைக்கலே. அப்படி இருந்தும் அவளாலே பறக்கமுடிஞ்சுது... உனக்கோ சிறகு இருக்கு. ஆனால் நீ சேற்றிலே மாட்டிக்கிட்டு வெறுமே சிறகை அடிச்சுக்கிட்டு பறக்கிறதா நினைக்கறே!

வித்யா : (சிரித்து) நா ஒண்ணும் சேற்றிலே மாட்டிக்கலே. பறந்துகிட்டுத்தான் இருக்கேன். நீ எதையோ என்னைப் பற்றி அறிஞ்சுக்கறதுக்குத்தான் இப்படி பெரிய சரக் கூடம் போட்டுக்கிட்டு கிட்டேவரே.

ந. வா. : எதை அறியறதுக்கு?

வித்யா : சொல்லட்டுமா?

ந. வா. : சொல்லு

வித்யா : எனக்கு ஒரு காதலன் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. வா. : அவன் பேரை guess பண்ணட்டுமா?

வித்யா : guess?

ந. வா. : அவன் பேரு முதல் எழுத்தைச் சொல்றேன்.

வித்யா : ம்.* சொல்லு!

ந. வா. : N!

வித்யா : மூஞ்சியைப்பாரு! உன்பேரும் 'N'லேதானே ஆரம் பிக்குது!

ந. வா. : (விழிப்படைந்து) நானில்லே, நானில்லே!

வித்யா: அவன் பேரு நர்த்தன்!

(ந.வா. டப்பாவைத் தூக்கி நாற்காலியில் சப்தமிட வைத்தல்)

ந. வா. : வித்யா, இந்த வடாம் யாரு கொடுத்தான்னு சொன்னே?

வித்யா : ஹோட்டல் வச்சிருக்கிற ஒரு பிரண்டு. ஓ! அவர் கல்யாணமானவரு. (சிரித்து) அவர் என் பழைய காதலர். ஆனால் அதெல்லாம் தீர்ந்துபோன விஷயம். ரொம்பப் பேரு இப்பவும் எங்களைப் பத்தி Gossip பண்ணிண்டி ருக்கா. அதைக் கேட்டுட்டையா? த்ச! பாவம்! அந்த ஹோட்டல்காரர். He is coward! பெஞ்சாதிக்குப்பயந்த ஆளு!

ந.வ. : உண்மைக்கு உண்மை முகமூடி! நான் என்னமோ சொல்றேன். நீ வேறே ஒரு உண்மையைப்பற்றி பேசறே. இந்த ஹோட்டல்காரரையும் உன்னையும் பற்றிய gossip எல்லாம் எனக்கு தெரியாது வித்யா. இதையெல் லாம் விட்டுத் தள்ளு * கண்ணகியைப் பற்றி அன்னிக்கி என்ன சொல்லிண்டிருந்தே.

கோரஸ் : கண்ணகியம்மா !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்யா : இத பாரு. உனக்கு போதை போலேருக்கு? என் னென்னமோ ஒளர்றே! நர்த்தனை நான் ஒண்ணும் மூடி மறைக்கலே என் பிரண்ட்ஸ்ங்க எல்லாருக்கும் தெரியும். அவனை நான் கல்யாணம் பண்ணிக்கவும் போறதில்லே. இன்னும் ரெண்டு வருஷத்திலே அமெரிக்காவுக்குப் போயிடுவான்...

ந. வா. : கண்ணகியைப் பற்றி அன்னிக்கு என்ன சொல் லிண்டிருந்தே?

ஒரு உருவம் : (எழுந்து நின்று மேடைப் பேச்சுத் தோர ணையில்) கண்ணகி என்ற சிலப்பதிகார நாயகி ஒரு frigid woman. ஆரோக்கியமான செக்ஸ் உணர்வுகள் இல்லாதவள்.

ஒரு குரல்: அதிலும் இருக்குதொரு

கோரஸ் : ஞாயம்!

நிற்கும் உருவம் : செக்ஸ் உணர்வு அற்ற இந்த கண்ண கியைத் தமிழன் பெண் குலத்துக்கே ஆதர்சமாக வைத் திருக்கிறான். இது பெண்களை அடக்கி வைக்கக் கையாளப்பட்ட தந்திரங்களில் ஒன்று.

ஒரு குரல் : அதிலும் இருக்குதொரு

கோரஸ் : ஞாயம்!

(உருவம் உட்காருகிறது)

வித்யா : நான் சொன்னது இருக்கட்டும். கண்ணகியைப் பற்றி நீ என்ன சொல்றே?

ஒருகுரல் : நெருப்பிலிறங்கி
நெருப்பை சுட்டது

கோரஸ் : சீதைத் தீ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகுரல் : மாரைத் திருகி
மதுரையிலெறிந்து
ஊரையெரித்தது

கோரஸ் : இன்னொரு தீ

(நீண்ட மௌனம்)

ந. வா. : ஸ்பெயினிலிலே ஒரு கண்ணகி இருந்தாளாம்... கேக்கறயா?

வித்யா : (தலையைச் சொறிந்து) ரொம்ப போரடிப்பே போலிருக்கே! சொல்லுபார்க்கலாம். நான் புறப்படணும்.

ந. வா. : அந்தக்காலத்திலே ஒரு ஸ்பானிஷ் பிரபு கல்யாணம் செய்துண்டானாம்... என் அமெரிக்கக் காதலி சொன்ன கதை இது.

வித்யா : ம்!

ந. வ. : மனைவி என்னடான்னா, வேறே ஒருத்தனோட அவளுக்குக் காதலாம்.

வித்யா : கண்ணகி கதைன்னயே?

ந. வா. : கண்ணகிதான் இவளும். கேளு. கணவன், காதல் இரண்டிலே எது நெருப்பு? அதைத் தொடர்கிறவள் எவளாயிருந்தாலும் அவதான் கண்ணகி * ஒரு நாள் அவள் காதலனோடே பெட் ரூமிலே இருக்கறப்ப எதிர்பாராத விதமா புருஷன் வந்துட்டான். * காதலனை அவ கட்டிலுக்குக் கீழே ஒளிச்சுட்டு அவ கட்டில்லே இப்படி உக்காந்திருந்தா! (கட்டில் மேல் ஏறி கால்களைக் கட்டிலில் தூக்கி வைத்து உட்காருகிறாள், காலணிகளைக் கழற்றிவிட்டு) சுவரிலே (திரும்பி நிலைக் கண்ணாடியைக் காட்டி) இப்படி பளபளன்னு மின்னிக்கிட்டு ஒருவாள் * கணவனுக்கு மனைவி மேலே சந்தேகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையிலே அங்கும் இங்கும் காதலனை தேடறான். கடைசிலே கட்டில் அடியிலே பார்க்கக் குனியறான்.

(மௌனம்)

வித்யா : அப்புறம்.

(ந.வா. கட்டிலின்மேல் திடீரெனப்பாய்ந்து எழுந்து கண்ணாடியைத் தீண்டி வாளை உருவி, கட்டிலில் முழங்காலிட்டு வாளை வீசும் பாவனை செய்கிறான்)

கோரஸ் : சதக்

ஒரு குரல் : (மரண ஓலம்) ஹா!

(கண்ணாடி நிலைகுலைந்து ஆடுகிறது. மௌனம்)

வித்யா : இதுக்கும் கண்ணகி கதைக்கும் என்ன சம்பந்தம்?

ந. வா. : (வாளை உயர்த்திப் பிடிக்கும் பாவனை) உக்ரம்; Intensity! நெருப்பு!

கோரஸ் : (உருவங்கள் பக்கவாட்டாக ஆடுகின்றன)
நெருப்பிலிறங்கி
நெருப்பைச் சுட்டது
சீதைத் தீ!
மாரைத் திருகி
மதுரையிலெரிந்து
ஊரையெறித்தது
இன்னொரு தீ! (ஆட்டம் நிற்றல்)

வித்யா : ஹ! உன் ஸ்பானிஷ் கண்ணகி தன் இச்சைச்கு ஏற்ற மாதிரி காரியம் நடக்கலேன்னு கணவனை கொலை செய்தாள்.

ந. வா. : இல்லே! தன் காதலுக்கு அகௌரவம் வரக்கூடாதுன்னு கொலை செய்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்யா : (எரிச்சலுடன்) இதெல்லாம் ஏன் நீ எனக்குச் சொல்லிண்டிருக்கே ?

ந. வா. : (கட்டிலைத் தட்டிக் காண்பித்து) உண்மை ஒன்றைச் சொல்லி இந்த உண்மையான உண்மையை மறைக்கறே. உன் பிரக்ஞை இன்னும் கொல்லைப்புறக் காதலிலேதான் நிக்கறது. சேற்றிலே மாட்டிண்டு சிறகையடிக்கறே! போதுமா?

வித்யா : நன்னா உனக்கு போதை ஏறிட்டுது. (போலித் தனமான இதத்துடன், ஏளனமாக) கொஞ்சம் வடாம் சாப்பிட்டுத் தூங்கு. நான் கிளம்பிப் போயாகணும்.

ந. வா. : எங்கே போறே?

வித்யா : ஒரு பார்ட்டிக்கு. அங்கே என் டாக்டரைப் பார்ப் பேன். அன்னிக்கு அவரையும் கூடத்தான் உனக்கு introduce பண்ணேனே? எக்ஸ்ரே ஷீட் வந்துட்ட தான்னு கேக்கணும். என் குரல் விஷயமா. எக்ஸ்ரே எடுத்திருக்கு.

ந. வா. : குரல் விஷயமாகவா? எக்ஸ்ரேயா!

வித்யா : ஒரு நைட்கிளப்லே மீட்பண்ணுவோம் நாங்க பிரண்ட்ஸ் எல்லாம். அங்கேயே பார்ட்டி.

ந. வா. : உன் குரலுக்கு என்ன ஆச்சு, வித்யா?

வித்யா : குடிப்பேன். டான்ஸும் உண்டு. நீ கொஞ்சம் தூங்கிட்டு நான் வந்தப்பறமா போ, என்ன? நடத்து போயிடுவையோன்னா. இங்கேருந்து எவ்வளவு தூரம் உன் ரூம் இப்ப உனக்கு பஸ் கிடைக்குமோ என் னவோ?

ந. வா. : (மௌனம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்யா : இந்தத் தெருவழியா வான்னாரு வேறே ஒரு பிரண்டு. காரிலே வந்திருந்தாரே அன்னிக்கு? அவர் இல்லேன்னா அவர் வீட்டுக்குப் போயிடுவேன். காரிலே அங்கேருந்து கிளப்புக்கு.

ந.வா. : (*தயக்கம்*) நான் வடாத்தை முடிச்சுட்டு தூங்க றேன். என் ரூம் இங்கேருந்து ஒரு மைல்தான். நடந்தே போயிடலாம். நீ போயிட்டு வா. அப்பறம் கிளம்பறேன்

வித்யா : (*பாட்டிலைக் காட்டி*) குடிக்கிறதானா மிக்ஸ் பண்ணிக் குடி! தீர்த்துக்கட்டு

(*செக்ஸியாகச் சிரித்துவிட்டு கதவை திறந்து வெளி யேறி விடுகிறாள். ந.வா. கதவைத் தாழ்ப்பாளிட்டு விட்டுத் திரும்புமுன் கட்டிலின் கீழிருந்து நாகன் புறப்படுதல், நாகன் ஸ்டவ் மேஜைக்குப்போய் ஸ்டூ லில் உட்காருகிறான். ந.வா. அவனை இன்னும் கவனிக்கவில்லை. விஸ்கியை இரண்டு டம்ளர்களில் ஊற்றுகிறான். இரண்டு டம்ளர்களையும் எடுத்துக் குனிந்த வாக்கில் திரும்பிக் கட்டில் கீழே பார்த்து*)

ந. வா : வெளியே வாப்பா — அ! எங்கே ஆளு? (*திடுக் கிட்டு எழுந்து*) ஓ!

நாகன் : (*எழுந்து நின்று தலையைச் சொறிகிறான்*) ஸார்... நீங்க... நீங்க... போயிடுவீங்க. அவுங்க இருப் பாங்கன்னு நெனச்சேன்... ஆனா அவுங்க போயிட் டாங்க நீங்க இருக்கீங்க.

ந. வா. : (*ஒரு டம்ளரை நாற்காலியில் வைத்து*) சாப்பிடு. சாப்பிடுவையோன்னோ?

நாகன் : (*சங்கடம்*) அவுங்கதாங்க (*தயங்கி*) வித்யா. அவங்களைத் தெரியுங்க எனக்கு * வேடிக்கையா ஒளிஞ் சேன். (*சங்கடத்தை சமாளித்தல். திடீர் முடிவுக்கு வந்தவன்போல் டம்ளரை எடுத்துக்கொள்கிறான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.வா. தனது டம்ளரினால் அவன் டம்ளரைத் தொடுதல்) என்னங்க இது பண்றீங்க? (டம்ளர்கள் மோதிய ஒலி. உடன் நாகன் லேசாகச் சிரித்தல்) அ! அ! (இருவரும் அருந்துகின்றனர்) தெரிஞ்சுக்கிட்டீங்களே.

ந. வா. : எதை? நீ குடிப்பேங்கறதையா?

நாகன் : ஊஹூம் (சிறு சங்கடம். அதையும் திடீரென மீறினாற்போல ஒரு கையை முஷ்டி பிடித்து அதைக் கட்டிலுக்குக் கீழே புகுத்தி இழுக்கும் பாவனை செய்கிறான். இருவரும் சிரிக்கின்றனர்.) நீங்க பாண்டை கட்டிலுக்குக் கீழே எம் மூஞ்சிலே வீசினேளா? பயந்துட்டேன். அப்புறம்தான் போகப்போக பயம் கலைஞ்சுது.

ந. வா. : பாண்டை எடுத்துண்டு போனே. அப்புறம் பார்த்தா பாண்ட் கட்டில் மேலே கெடக்கு. வித்யாகிட்ட நீ பயப்படலேங்கறது எனக்கு முதலே தெரிஞ்சுடுத்து... தெருவைப் பார்த்தா நீள தெருவிலே யாரையும் காணம். நடந்து போய் அவ்வளவு சுருக்க மறைஞ்சிருக்க முடியாது...

நாகன் : தெரு விஷயத்திலே ஏமாந்திருப்பீங்க. நா இன்னிக்கி என் சைக்கிள்ளே வரலீங்க. சைக்கிள்ளே வந்திருந்தா தெருமுனை தாண்டிருப்பேன், பாண்டை வீசி எறிஞ்சிட்டு.

ந. வா. : கட்டில் அடிலே இப்ப பார்த்தேனா? உன்னைக் காணலேன்னதும் ஏதோ நீ சொல்ற மாதிரித்தான் சைக்கிள்ளே போயிருப்பையோன்னு சட்னு தோணித்து. நம்ப துப்பெல்லாம் தப்புன்னு நெனச்சேன்...

நாகன் : நீங்க மெட்ராஸுங்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. வா : இல்லேப்பா. வேறே ஒரு தேசம்.

நாகன் : நான் மெட்ராஸுங்க. நா ஒரிஜினல் மதுரை ஜில்லா... அதுகெடக்குதுங்க. (சீரியஸாக) உங்க கன்னத்துலே என்னங்க கண்ணீரா? (ந.வா. புறங்கையால் கன்னத்தைத் துடைத்தல், மௌனம்) மன்னிச்சுக்கங்க. உங்க நிலைமை தெரியாமே வேடிக்கையாப் பேசிட்டேன். நீங்களும் வேடிக்கையாத்தானே பேச நீங்க ?

ந. வா. : இந்த ரூமிலே வேறே ஆம்பளைங்களைப் பார்த்தா உனக்கு வேடிக்கையாத் தோணுமேன்னுட்டு நானும் வேடிக்கையாப் பேசினேன். (மௌனம்) புரியுதல்ல.

நாகன் : புரியாமெ என்னாங்க? (மௌனம்)நான் படிக்காதவன் சார். ஆனா நாங்க கள்ளருங்க. நீங்க வேறே தேசம்கறீங்க. கள்ளருன்னு ஒரு ஜாதி இருந்திச்சு தெரியுங்களா?

ந. வா. : அப்படியா? தெரியாது சொல்லு.

நாகன் : கள்ளன் ஏமாத்த மாட்டான், ஆனா திருடுவான். நீங்கள்ளாம் ஸார். படிச்சவுங்க. (உக்ரத்தோடு) நீங்க படிச்சவுங்க. திருட மாட்டீங்க ஸார் நீங்க. ஆனா ஏமாத்துவீங்க.

ந. வா. : (அருந்துதல்)

நாகன் : ஆனா பாருங்க திருடறவன் ஒரு நாளும் காரிலே போனது கெடையாதுங்க. ஏமாத்தறவன்தான் காரிலே போறான். பொண்ணையும் தூக்கிப் போட்டுக்கிட்டுப் போறான் சார். பொண்ணையும் அப்படியே அலாக்காத் தூக்கிப் போட்டுக்கிட்டு (அருந்தி முடித்து டம்ளரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்காலியில் வைத்தல். ந.வா. மேஜையிலிருந்து விஸ்கியை கொண்டுவந்து நாகன் டம்ளரில் ஊற்று தல். நாற்காலியிலேயே பாட்டிலை வைத்தல்) டேய் பட்டாளத்தான்! அப்படித்தாங்க தாத்தா என்னெக் கூப்பிடுவாரு — பட்டாளத்தான்னு! டேய் இவனேன் னாரு எங்க தாத்தா. ஏமாத்தாதே! திருடு! வேலை செய்து பொழைக்கறதும் திருடறதும் ஒண்ணுங்க. வேலை செய்யறோம். முடிஞ்சி போச்சி. அப்புறம் படி வாங்கறப்ப அது சும்மாதாங்க வாங்கறோம். சும்மா எடுத்தா திருட்டா இல்லியா. திருடினா ஒண்ணுமில் லேங்க. ஏமாத்தப்புடாது. ஏமாத்தறவன் பொண்ணை யண்டான்னாரு எங்க தாத்தா! எல்லாருமே இப்போ பொம்புளைங்கடா ஒலகத்துலேன்னாரு. ஆம்புளையா இரு போ! குடிங்க சார்! (டம்ளரை எடுத்து அருந்து கிறான்.) நான் கள்ளனுங்க. அதான் கட்டில் அடிலே ஒளிஞ்சேன். நீங்க பேசிக்கறதிலே என்னத் தெரிஞ்சிக் கலாம்னு. தெரிஞ்சி போச்சி. வித்யாவுக்கு சிநேகிதங்க எக்கச்சக்கமா இருக்குன்னு தெரிஞ்சிபோச்சி. நர்த்தன்! அந்த ஆளு... இந்த ஆளு... இவுங்க ஒத்தரையும் பத்தியும் எனக்குத் தெரியாதுங்க இன்னி வரைக்கும்.

ந. வா. : உன்னைப் பற்றியுந்தாம்பா நர்த்தனுக்குத் தெரி யாது...

நாகன் : அந்த ஆளைப் பத்தி எனக்கும் தெரியாதுங்க. (மௌனம்) சொதந்திரமா இருந்தா ஒரு ரகசியமும் வேண்டிய தில்லீங்க. வித்யா சுதந்திரமா இருக்கேன்னு சொல்லிப்பாங்க. ஆனா நான் ரகசியமாயிட்டேன். கட்டில் கீழே இருக்கப்ப தோணிச்சு. நான் ஒரு ரகசியம் அப் டீன்னு. (மௌனம்) எத்தினி நாள் என்னை அல்லாருக் கும் தெரிய சினிமாவுக்குக் கூட்டிட்டு போவயான்னு கேட்டிருக்கேன்? ஆமா ஆமான்னு ஏமாத்திட்டே வரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மௌனம்) அப்புறம் ஒரு நாள் பேப்பர் பத்திரிகை வாங்கிண்டு வான்னு சொன்னாங்க. வாங்கியாந்தேன். அவுங்க படிச்சதைப் பார்த்துட்டேருந்தேன். எனக்குப் படிக்கத் தெரியாதுங்க. அவுங்க படிக்கறதைப் பார்த்துட்டிருப்பேன். (மௌனம்)ஆனா என்ன பண்ணாங்கறீங்க?

ந. வா. : என்ன பண்ணா?

(நாகன் டம்ளரை நாற்காலியில் வைத்துவிட்டு கதவுப்புறம் உள்ள மேஜைக்கு வருதல். ஒரு பத்திரிகையை எடுத்துப் படிக்கும் பாவனையோடு பழைய இடத்துக்கு வருகிறான்.)

நாகன் : (பாவனையோடு) அப்படி இப்படியெல்லாம் புரட்டிப் புரட்டிப் படிச்சா! அப்புறம் [பாவனை] நாலு துண்டா மடிச்சு இப்படி எறிஞ்சுட்டா (மேஜைக்கு பத்திரிகையை எறிகிறான்)

ந. வா. : அதனாலென்ன! பத்திரிகை படிச்சா பழசு.

நாகன் : அது சரிங்க. ஆனா மனுசன் பழசாயிட முடியுங்களா? (மௌனம்) என்னைப் பத்தி யோசனை பண்ணிக்கிட்டேங்க [வேகமாக] அழுதிருப்பேங்க.ஆனா, தாத்தா சொன்னார். டேய் பட்டாளத்தான் அழாதேடா! அழறதை விட தூக்கு மேடைக்குப் போவலாண்டான்னாரு. நா அழலே... ஏங்க நீங்க என்ன ஜாதிங்க அழறீங்க?

ந. வா. : எனக்கு ஜாதி கிடையாதுப்பா நான் சும்மா ஒரு ஆளு. அவ்வளவுதான். அது சரி. உன் அப்பா அம்மா எல்லாம் மெட்ராஸிலேயே?

நாகன் : அம்மா பூட்டாங்க. அப்பாரு மெட்ராஸ்லே ரெண்டு ஆட்டே ரிக்ஸா வச்சிருக்காரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. வா. : உங்கப்பா அப்புறம் கல்யாணம் பண்ணிக்கல்லே.

நாகன் : பண்ணிக்கிட்டாருங்க. ரெண்டு பொம்பளை வச்சிருக்காரு. குடும்பக்கட்டுப்பாடு பண்ணிட்டாரு.

ந. வா. : (இரண்டு விரல்களைக் காட்டி) இரண்டா? அதோட குடும்பக் கட்டுப்பாடு?

நாகன் : (சிரிக்கிறான்) அதாங்க ரெண்டுக்கு மேலே ஒண்ணுமே வாண்டாங்கறாங்க பாருங்க?

ந. வா. : ரெண்டு பேரையும் ஒரே வீட்லே வச்சிருக்காரா, இல்லே... ?

நாகன் : ஹெ! அதெப்படீங்க? கொழந்தையாட்டமா பேச றீங்களே! பெரிய ரகளையாப் பூடுங்க. [மௌனம்] அப்பாரு என்னை டில்லிக்கு டிக்கேட்டுவாங்கி அனுப்பிச்சதே அதாங்க. அங்கிருந்தா ரெண்டு பொம்பளைலே யாரு கிட்டேயாச்சும் ஒளறிடுவேன்னு. வந்துங்க 'கரோல் பாக்லே' நின்னேங்க. ஒரு ஆளு கூடத்தாங்க வந்தேன். ஹோட்டல்லே கிளினிரா நின்னு சர்வராயிட்டேங்க. அப்புறம் முதலாளி வீட்லே நின்னேன். அப்புறம் இங்கே லாண்டரிக்கு வந்துட்டேன். (அருந்துகிறான்.)

ந. வா. : ஹோட்டல் முதலாளி வீட்லேயா.

நாகன் : ஆமாங்க (வடாத்தை எடுத்துக் கொடுத்து) இந்த வடாம் கொடுத்த முதலாளிங்க. வித்யா அங்கே வருவாங்க. எங்கூடப் பேசுவாங்க. இங்கேயே லாண்டரிலே வேலை வாங்கிக் கொடுத்தாங்க. ஒரு நைட்ஸ்கூல் இருக்கு இங்கே சேர்த்து உடறேன், படிப்பு படிச்சுக்கன்னு சொன்னாங்க. அப்படித்தாங்க முதலாளி முன்னாடி வச்சி சொன்னாங்க. அப்புறம் அந்தப் பேச்சே இல்லிங்க. எனக்கு இப்ப ஒரே இதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குங்க, எனக்கு ஒரே வெறுப்புங்க இப்போ! கடை சீல ஒண்ணுமில்லீங்க, பிராந்தி குடிக்கப் பழக்கினாங்க. முதவாட்டிவாந்தி எடுத்துட்டேன். இப்போ என்னென்னத்துக்கெல்லாமோ பழகிட்டேன். ஆனா என்னங்க ஒண்ணுமே இல்லீங்க...(அருந்திமுடிக்கிறான்) இப்போ வித்யாவைப் பத்தி அல்லாமே தெரிஞ்சிப் போச்சுங்க.

ந. வா. : ஏம்பா? கட்டில் அடிலே ஒளிச்சிருந்து ஒருத்தர் மனசை ஒத்துப் பாத்துட முடியுமா?

நாகன் : முடியாதுங்க. ஆனா உங்க கிட்டே நான் இப்ப அல்லாத்தையுமே சொல்றேங்க. ஏன்னா நீங்க வித்யா கிட்டே பேசிட்டிருக்கப்பதாங்க அவுங்க மனசு தெரிஞ்சுது. இதுக்கு மின்னாடி ஒரு ஆளுகிட்ட அவ பேசறதை ஒத்துக் கேட்டேங்க. இவ்வளவு தூரம் தெரியலீங்க. ஒரு கதை சொன்னீங்க பாருங்க... ஒருத்தி புருசனைக் கொலை பண்ண கதை... அதாங்க, வித்யா எம் மேலே கவுரவம் காமிக்கலேன்னு அதிலே புரிஞ்சுதுங்க... கவுரவம் இருந்தா எனக்காகக் கொலையும் செய்வாங்க. ஆனா, உங்களைப்போல யாருக்கும் முன்னாடி வந்துட்டேன்னா சிடுசிடுன்னு விழறாங்க. ஏன்னா நான் ஒரு ரகசியம். வித்யா அடிக்கடி ரகசியமா பண்ற ஒரு கெட்ட காரியம் — அது நான்!

ந.வா. : (நாகன் டம்ளரில் விஸ்கியை ஊற்றி) இத பாரு, வாந்தி வந்திருக்கல்லே உனக்கு! முதல் தடவை பிராந்தி குடிச்சப்ப?

நாகன் : ஆமாங்க, (நாகன் தள்ளாடுதல், போதை,)

ந. வா. : வாந்தியை முழுங்கினாயா?

நாகன் : அதெப்படிங்க முழுங்கறது! சே!

ந. வா. : இங்கேயே வாந்தியைத் துப்பிட்டுப் போ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகன் : அ? (போதை)

ந. வா. : புறத்தியார்னா பெஞ்சாதி புள்ளை கூட புறத்தி தான். ஒரு அளவுக்கு மேலே உன்னாலும் ஒண்ணும் பண்ண முடியாது. என்னாலும் முடியாது. வாந்தி மாதிரி இப்படி. எவ்வளவோ வரும். துப்பிட்டு நடையைக்கட்ட வேண்டியதுதான். திரும்பிப் பார்க்கப் படாது!

நாகன் : ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு மாதிரிங்க. நீங்க வாந்தி மாதிரி பார்த்து துப்பிடுவேங்க. எனக்கு அப்படி இல்லீங்க. வாயை துப்பிட முடியுங்களா? (தள்ளாடல்)

ந. வா. : (மௌனம்) என்னதான் பண்ணப்போறே நீ?

நாகன் : நீங்க புறப்பட்டுப் போயிடுங்க சார்.

ந. வா. : இதபாரு. அவ வந்ததும் அழுதுடு. அவ நல்லவ!

நாகன்: அழறதா (சிரித்தல்)

ந.வா. : செல்றதைக் கேளு. பணம் தரேன். மெட்ராஸுக்கு டிக்கெட்டும் வாங்கித்தரேன். போயிடு, அல்லாத்தையும் மறந்துடுவே.

நாகன் : நீங்க புறப்பட்டுப் போயிடுங்க சார். இது நாள்பட் டுப்போன விசயம். மனசிலே ரொம்ப சேர்ந்து கெடக்கு எனக்கு. நீ போயிடு சார்.

ந. வா. : சரி போயிடறேன்! ஒரு வாட்டி குடிச்சுட்டு...

(நாகன் டம்ளரில் அதிகமாகவும் தன் டம்ளரில் சொற்பமாகவும் விஸ்கியை ஊற்றுகிறான். நாகன் குடிக்கிறான். போதை அதிகரிக்கிறது. கட்டிலில் உட் காருதல். ந. வா. டம்ளரை வாங்கி)

ந. வா. : [பருகியபடி] குடி! அப்போதான் அவ வந்ததும் ரெண்டு பேச்சு பேசலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகன் : பேச்சா? (அருந்துதல்) இருந்துபாரேன்! பேச்சென்ன பேச்சு. (அருந்துதல்) ஏய், நீ என்னெக் குடிக்க வைக்கறே இன்னா? யோசிச்சுட்டு நான் வெறிலே...... (விக்கல். அருந்துகிறான், பின்னாடி சரிய நட்சத்திரன் அவனைத் தள்ளிக் கட்டிலில் விழுத்துகிறான்) அடியே, நீ பறங்கிச்சின்னு நெனப்பாடி?

ந. வா. : படுப்பா கொஞ்சம் தூங்கு அவ வந்ததும் சொல்றேன்.

(நாகன் குரல், புரியாமல் கொஞ்ச நேரம் உளறுகிறது. பிறகு பேச்சில்லை. ந.வா அவனை கட்டிலில் நீளவாக்கில் வளர்த்துதல். அவனையே பார்த்து நிற்றல். நாகன் ஒரு தடவை எழுந்து உட்கார முயன்று)

நாகன் : அந்தப் பறங்கிச்சி எங்கேடா? ஏய் (தளர்ந்து சரிந்து படுத்தல்) போயிட்டா; காரிலே போயிட்டாளா? போறா போறா (குரல் மங்கி மறைதல்)

(உருவங்கள் பக்கவாட்டாக ஆடுதல். ந.வா.உறைவு)

ஒரு குரல் : தூரா தூரத்திலே

கோரஸ் : பறங்கி

ஒரு குரல் : காடுகள் ஓடுதடா
காருலே ஓடலாண்டா

கோரஸ் : பறங்கி

ஒரு குரல் : காத்தாப் பறக்கலாண்டா!

ஒரு குரல் : வெள்ளையன் சந்தையிலே

கோரஸ் : பறங்கி

ஒரு குரல் : கள்ளு விக்குதடா
கள்ளுக் குடிச்சுப்புட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரஸ் : பறங்கி

ஒரு குரல்: துள்ளிக் குதிக்கலாண்டடா!

ஒரு குரல்; தலைக்குள் கள்ளுத் தண்ணி

கோரஸ் : பறங்கி

ஒரு குரல் : துளைச்சு ஓடுதடா !
துளைச்சு ஓடறப்ப

கோரஸ் : பறங்கி

ஒரு குரல் : கொரல்கள் கேட்குதடா!

ஒரு குரல் : கொரல்கள் கேட்குதடா!

கோரஸ் : பறங்கி

ஒரு குரல் : தலையைச் சுத்திச் சுத்தி!
தலையைச் சுத்திச்சுத்தி!

கோரஸ் : பறங்கி

ஒரு குரல் : கொரல்கள் கேக்குதடா!

ஒரு குரல் : ஓராளு அஞ்சு குரல்

கோரஸ் : பறங்கி

ஒருகுரல் : அஞ்சாளு பத்து குரல்
அஞ்சாளு பத்துகுரல்

கோரஸ் : பறங்கி

ஒரு குரல் : பத்தாளும் ஒரே குரல்!

(ஆட்டம் நிற்கிறது. ந. வா. டப்பா டம்ளர்களை ஸ்டவ்மேஜைக்குக் கொண்டுபோதல். தலைவிரி கோலமாக வித்யா உள்ளே வருகிறாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்யா : (நாகனைப்பார்த்து) இதாரு! இவனா? இவனை ஏன் இங்கே தூங்க விட்டே? என்ன ஆச்சு? குடிச்சிருக்கானா? சரிதான்!

ந. வா. : உஷ்! அவனைத் தூங்கவிடு. இப்போ நீயும் நானும் இவன் வேலை செய்யற லாண்டரிக்குப் போய் ஆளுங்களைக் கொண்டாந்து இவனைக் கொண்டுகிட்டுப் போகச் சொல்லணும்.

வித்யா : ஔர்றயே! அவுங்கல்லாம் வந்து இவன் என் ரூம்லே குடிச்சுட்டுக் கிடக்கறதைப் பார்க்கணுமா? என்ன ஆச்சு சொல்லு. இவன் வரப்பவே குடிச்சிருந்தானா?

ந. வா. : நீயும் நானும் பேசறப்ப கட்டில் கீழே ஒளிஞ்சிருந்திருக்கான்.

வித்யா : (திடுக்கிட்டு) அ! உங்ககிட்டே ஏதும் உளறினானா?

ந. வா. : (மௌனம்) என் முன்னாடி எத்தனை முகமூடிகள்! என் துரதிர்ஷ்டம் மனுஷ உறவிலே வர்ற சுகங்களை என்னாலே ஏற்க முடியாமே இருக்கிறதுக்குக் காரணமே நான் முகமூடிகளை ஏற்க முடியாமே இருக்கிறதுதான்.

வித்யா : இவன் என்ன சொன்னான் உங்கிட்டே? அதைச்சொல்லு முதல்லே.

ந. வா. : தான் கள்ளர்ஜாதியாம். தூக்குமேடைக்கு போவானாம்... நீ தன்னை அவமானப்படுத்தறயாம்...... என்ன செய்யப் போறான்னு மட்டும் சொல்லலே. அவ நல்லவ, வந்ததும் அழுதுடுன்னேன்... இத பாரு வித்யா, உங்க ரெண்டு பேருக்குமே ஆளை ஆள் புரியலே. நீ என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான்னா குடும்பம் வேண்டாம் உண்மையான வாழ்க்கை நடத்தறேன்னுட்டு, அயோக்கியத்தனமான ஒரு குடும்ப வாழ்க்கை நடத்தறே * உண்மையான உன் ஆம்ப ளையை கொல்லைப்புறத்திலே போடறே. சட்டி பானை விறகு வெட்டிலேருந்து விடுதலை கிடைக்கிறதிலே என்ன இருக்கு? கொல்லைப்புறத்திலேருந்து விடுதலை கிடைக்கலே உனக்கு * அவன்தான் உன் ஆம்பளைன்னு சொல்றதுக்கு தைரியமில்லே * கொல்லையிலே நிக்கற வனை வெளியே கொண்டு வராமே கூடத்திலே ஆடற வனைக் காமிக்கறே * இவன் என்னடான்னா, அழ மாட்டேன் தூக்கு மேடைக்குப் போறேங்கறான்.

வித்யா : (தள்ளாடி) நிறுத்து. இவன் சொல்றதை வச்சித் தானே இவ்வளவும் பேசறே? ஏதும் லேசா நடந்திருக்கும். இவன் அதைப் பெரிசு பண்ணயிருப்பான்னு யோசிச்சுப் பாரு (மௌனம். விஸ்கி பாட்டிலை எடுத்து பெட்டி யில் வைக்கிறாள்) கடைசிலே நீ ஹீரோவாகப் பார்க் கறயா? இப்படி எல்லாம் பெரிசா பேசி! (தள்ளாடல்) சே!

ந. வா. : இப்ப என்ன செய்யறது இவனை? அதைச் சொல்லு.

வித்யா : நான் தூங்கணும். ரெண்டுமூணு பெட்ஷீட் இருக்கு. அவனும் நீயும் அதுங்களை நிலத்திலே விரிச்சுட்டு கெடங்க. எனக்கு போதை. இன்னிலேருந்து போதை மட்டும்தான் (கட்டிலில் உட்காருகிறாள்)

ந. வா. : நான் சொன்னதைக்கேட்டு ரொம்பக் கோவிச்சுடு வேன்னு நினைச்சேன்.

வித்யா : இனி கோபம் கூட எனக்குப் பயனில்லே. என்னால் பாட முடியாது. குரல் போனது போனதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மௌனம்)

ந. வா. : டாக்டரைப் பார்த்தாயா? எக்ஸ்ரே ஷீட் வந்துடுத்தா?

வித்யா : சங்கீதத்தை தசை மறைஞ்சிருக்கு *

ந. வா. : அ! வித்யா !

(ஸ்ருதி ஓட ஆரம்பிக்கிறது—நாடகம் முடிவுவரை)

வித்யா : (நாற்காலிக்கு முன்னால் அதை மறைத்து மேடையின் முன்புலத்துக்கு வந்து நிற்றல். அடிக்கடி போதையின் சாயல் மற்றபடி நிதானமான நிலை] ஒரு காபி போட்டுக் கொடேன் !

ந. வா. : (திடீர் சுறு சுறுப்பு) போடறேன். என்ன சொல்றார் டாக்டர்! (ஸ்டவ்விற்குப் போய் பற்ற வைத்தல், மேஜையிலுள்ள பெரிய பாத்திரம் ஒன்றிலிருந்து நீரை காபி தயாரிக்கும் பாத்திரத்தில் ஊற்றுதல் முதலிய காரியங்களில் ஈடுபடுகிறான்.) உன் குரல் விஷயத்தைச் சொல்லு.

வித்யா : அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி வீட்டை விட்டு புறப்பட்டேன். * ஆருத்ரா மறுநாள்....

ந. வா. : வித்யா உன் குரலுக்கு என்னாச்சு சொல்லு?

வித்யா : (ந.வா.யைப்பற்றி சிரத்தையில்லாமல் தனக்கு தானே பேசுகிறாள்) முத நாள் ஆருத்ரா. நடுராத்திரி சிவ தரிசனம் * ஆயிரக்கால் மண்டபத்திலே என் சங்கீதத்தைக் கேட்டுட்டு ஸ்வாமி எழுந்தருளி வரணும் * ஆனா கோவில் தீட்சிதருக்கும் எங்கப்பாவுக்கும் குடும்பப் பகைமை. என்னை தீட்சிதருக்கு யாருன்னு சரியாத் தெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யலே, என் குருவீட்லே பார்த்துட்டு ஆருத்ராவுக்கு பாட ஏற்பாடு பண்ணிட்டார்.

(மேடையில் விளக்குகள் மங்குகின்றன. ந.வா. நிற்கும் பகுதியில் மேடை இருளடைகிறது. வித்யா கொஞ்சம் கொஞ்சமாக நிழலுருவாகிறாள்.)

வித்யா : (தொடர்ந்து) அப்பாவுக்கு இது தெரிஞ்சுடுத்து. அவர் முரடர். எப்பவுமே எனக்கும் அவருக்கும் கசப்பு. அன்னிக்கு நான் பாடறப்ப எனக்குள்ளே ஒரு பயம் என்னைத் துரத்திண்டே வந்துண்டிருந்தது. என் சங்கீதம் இந்த பயத்தை உணரவில்லை. ஆனால் நான் உணர்ந்தேன். பின்னாடி, இந்த பயம் என்னன்னு புரிஞ்சுடுத்து. சங்கீதத்தோடு என் உருகுதல் அன்றோடு நின்று நான் உறையப்போறேன் * பாடி முடிஞ்சதும் லேட்டாயிட்டது. அதோட, அது கோடையாயிருந்தும் ஒரு பெருமழை பிடிச்சுடுத்து. சினேகிதங்க என்னை வீட்டிலே கொண்டுவந்து விட்டுட்டுப் போயிட்டாங்க. மழைலே நனைஞ்சபடியே கதவை ரொம்ப நேரம் தட்டிண்டிருந்தேன். ரொம்ப நாழி கழிச்சுத்தான் கதவைத் திறந்தா அம்மா. பின்னாடி அப்பா நிக்கறதைப் பார்த்தேன். உள்ளே போன என்னை தலைமயிரைப் பிடிச்சு இழுத்து அப்பா அறைய ஆரம்பிச்சுட்டார். அம்மா அப்பாவைத் தடுக்கலே. தீட்சிதன் உன்னை வச்சிருக்கானாடி? ன்னு ஒவ்வொரு அறைக்கும் அப்பா கேட்டார். நான் ஸ்வாமிக்குன்னு பாடினேன்னேன். நான் எதிர்த்து பேசறேன்னாயிடுத்து மன்னிப்புக் கேக்கச் சொன்னார். * நான் தப்புப்பண்ணலேயே மன்னிப்புக் கேக்கறதுக்குனேன். நான் அந்த வீட்டை விட்டுப்போறவரைக்கும் அங்கே சாப்பிட மாட்டேன்னார் அப்பா. வெளியே மழை உரத்துக்கொண்டே இருக்கு. 'அவ காலைலே போகட்டும்' அப்படீன்னா அம்மா. நான் அப்படியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கிட்டேன். மழையிலே தொப்பலா நனைஞ்ச சேலையை மாத்தலே * என் உள்ளே ஒரு தனி உறைவு ஏற்பட்டு வெளியே இருந்த குளிரை அற்பமாக்கிட்டது.* சங்கீதத்தினாலே எனக்கு வைப்பாட்டி பட்டம் கிடைக்கணுமான்னு அடிக்கடி என்னை நானே கேட்டுக்கொள்கிறது என் காதிலே விழுந்தது. * உள்ளூர என் குரல் கோரமாக உறுமிற்று சங்கீதத்தை எழ விடாமல் நானே குரைத்துக் கொண்டிருந்தேன்.* விடியுமுன் என் பயங்கர கனவுகளிலிருந்து ஓடுகிறவள் மாதிரி யாருக்கும் சொல்லாமல் என் குரு வீட்டுக்குப் போய்விட்டேன். நான் படிப்பதற்கான செலவுகளுக்கு தசையைத்தான் நான் விக்க வேண்டியிருந்தது. அடிக்கடி சாயந்தரங்களில் ஒரு ஜுரம். ஓரிரு வாரங்களினுள்ளேயே என் குரல் கட்டுக் கடங்காமல் சிதற ஆரம்பித்து விட்டது. இப்போ எக்ஸ்ரே ஷீட் என் குரலுறுப்பிலே ஒரு தசை வளர்ந்திருக்கிறதை காட்டுது. இதை அறுத்தெறிந்தால் என் குரலே போயிடும். விட்டு வைத்தால் சங்கீதத்துக்கு இடமில்லே.

(அவளுக்குப் பின்னால் கட்டிலின்மேல் நாகன் தள்ளாடியபடி நிற்கிறான், நிதானமற்று இறுதிவரை இவன்பக்கம் ந.வா.,வித்யா பார்வை விழுவதில்லை)

வித்யா: (தொடர்கிறாள்) இன்னிக்கு இங்கே வந்து நிக்கிற நீ! ஐந்து வருஷத்துக்கு முன்னாடி என்கீதத்தைக் கேட்ட நீ! உன் விளக்கங்களை கட்டில் அடியிலே சுருண்டிருந்து கேட்ட ஒரு பாம்பு! ஆமா! நக்ஷத்ரவாஸி.! என் கீதத்தைக் கேட்ட உன் விளக்கங்களிலேதான் நாகன் என்னைத் தெரிஞ்சுக்க முடியும்! அவன் நான் வளர்த்த பாம்பு.* என்னையறியாமலே என்னை நானே கொல்றதுக்கு அவனைத் தயாரித்திருக்கிறேன். ஒரு பெண்ணினால் ஆணை தற்கொலைக் கருவியாகக்கூட ஆக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். நக்ஷத்ரவாஸி இதில் உன் பங்கு அற்பமானது. (நாகன் தள்ளாடி முன்வந்து நாற்காலியைகட்டிலில் நின்றபடியே குனிந்து தூக்குகிறான். தள்ளாடி கட்டிலில் பின் வாங்குகிறான். ஒளி மேலும் மங்கி அவனும் நிழலுருவாகிறான்.)

வித்யா : என் சங்கீதத்தை வழிமறித்த தசையைத்தான் என்னைக் கொத்தப் போகிற பாம்பாக நான் வளர்த்திருக்கிறேன். நக்ஷத்ரவாஸி! நீ போகலாம்!

ந. வா. : வித்யா, பாடு!

கோரஸ் : பாடு

வித்யா : (மௌனம். சுருதி ஓடுதல்) பாடவா? (குரல் தழும்ப) நான் சொன்னது ஒண்ணுமே உனக்கு அர்த்தமாகலையா? (அழுகை) என்னால் பாட முடியாதே? (குரலிட்டு அழுது நிறுத்துகிறாள்)

ந. வா. : வித்யா!

கோரஸ் : பாடு!

(சற்றுமௌனம். சுருதி ஓடுதல்)

ந. வா. : பாட்டைக் குரலிலிருந்து பிரித்தவன் நீதான்!

கோரஸ : பாடு!

(வித்யா திடீரென்று ஏகஸ்வரமாக பாட ஆரம்பிக்கிறாள். கரகரத்த தன் அவலமயமான குரலில். நாகன் திடீரென நாற்காலியைத் தலைக்குமேல் தூக்குகிறான். இருள். உடனேயே கண்ணாடி சிதறும் ஒளி. தூரத்திலிருந்து ஒரு இனிய பண்பட்டகுரலாக ஏகஸ்வரம்கேட்டு அணுகி ராகமாக விரிகிறது.)

(திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டியக்கம்

நர மஹா நரன்

(பாவனை நாடகங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

1990 நவம்பர்-டிசம்பர் 'வெளி' இதழில் வெளி வந்த இது ஏற்கெனவே ஆங்கிலத்தில் எழுதப்பட்டு என்னிடம் சில வருஷங்களாகக் கிடந்திருக்கிறது. தமிழாக்கியவர் காலப்ரதீப் சுப்ரமணியன். ஆனால் இது மொழி சார்ந்த நாடகம் அல்ல, ஆங்கிலத்தில் Mime என்று வழங்கும் ஐரோப்பிய பூர்விக நாடக முறை இது. மொழி என்று அடையாளம் காணக் கூடியது எதுவும் இதில் இருக்கவும் கூடாது. இதில் பாத்திரங்கள் சப்தங்களை எழுப்பினால் கூட அவை ஏதோ ஒரு மொழி போல ஒலித்தாலும் மொழி யாக இருந்து விடக்கூடாது.

மேஜை, நாற்காலி, குப்பைக் கூடைகள் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் இவை அந்தப் பொருள் களின் குணரூபங்களாகவே உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவற்றுக்கு கலர்களும், ஒளி அமைப்பும் அந்தந்த திருப்பங்களுக்கு ஏற்ற வியக்கியைத் தரவும் வேண்டும்,

நடிப்பில், பாவங்களில், சைகைகளில் துளிக்கூட இயற்கைத் தன்மை இருக்கக்கூடாது. முகங்களில் மேக்கப், ஆடை விபரங்கள் முதலியவற்றிற்கும் இதுவே விதி,

இத்தகைய படைப்பு, மேடையில்தான் படைப் பாகும், எழுத்தில் தரப்படுவது மிகக் குறைந்த பட்ச திசைகாட்டல் மட்டுமே. ☐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டியக்கம்

மூன்று மனிதர்கள். மூன்று நாற்காலிகள். ஒரு மேஜை. குப்பைக் கூடை. இவை தவிர, அரங்கின் பெரும்பகுதி காலியாக இருக்கிறது.

மூவரும் ஒருவர்பின் ஒருவராக, ஒருவரையொருவர் துரத்திக்கொண்டு, ஒருவித அவசரத்துடன் விழுந்தடித்துக் கொண்டு உள்ளே நுழைகிறார்கள். இருவர் கூட்டுச் சேர்ந்து, ஒருவனை அமுக்கிப் பிடித்து, அவனுடைய தலையைச் சீவ முயல்வது போன்ற சைகை வெளிப்பாடுகளைச் செய்கிறார்கள். அவன் எப்படியோ ஒருவிதத்தில் திமிறித் தப்பித்துக்கொள்ள, இப்போது மற்ற இருவரில் ஒருவன் சிக்கிக்கொள்கிறான். இம் மாதிரியான நிகழ்வுகளின் போது, அங்குள்ள சாமான்களின் மேல் எவ்விதத் தனித்த ஈடுபாட்டையும் காட்டாமல். அவற்றின் மேல் தாவிக் குதித்து வளைய வருகிறார்கள். அதே சமயத்தில். கூச்சலிட்டுக் கொண்டும் பிதற்றல் மொழியில் பேசிக்கொண்டும் இருக்கிறார்கள். பின்பு அதே ஒழுங்கீனமான தோரணையில் சென்று மறைகிறார்கள்.

மீண்டும் அந்த மூவரும் தோன்றுகிறார்கள். இப்போது அவர்களுடைய தோரணை, சாதாரணமாக, இயல்பாக இருக்கிறது. என்றாலும், முந்தியதன் சாயல் ஒட்டு மொத்தமாக மறைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடவில்லை. ஒருவரையொருவர், வக்கிரமாக நடத்திக் கொள்கிறார்கள். ஒருவரையொருவர் வழிபாடுகூடச் செய்கிறார்கள். ஒருவன் மற்றவனின் குழந்தை என்பதுபோல் ஒருவனுடைய முகவாயை மற்றவன் பிடித்துக் கொஞ்சுகிறான். இந்தச் சைகைகளுடன் அவர்களுடைய பிதற்றல்களும் சுருதி சேர்க்கிறது. ஒவ்வொரு சாமானையும் அவை ஏதோ புனிதமான விக்ரகங்கள் என்ற பாவனையில் சுற்றி வருகிறார்கள். அவற்றின் இருப்பை, கண்காட்சியாக்கிக் காட்டுகிறார்கள். ஒவ்வொருவனும் தனித்தனியாக வேறு வேறு சாமான்கள் முன், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறார்கள். அவற்றுக்குத் தம் முதுகைக் காட்டாமல் தீவிர பக்தியுடன், மரியாதையுடன். நாகரிகமாகச் சென்று மறைகிறார்கள்.

உடனே, அவர்கள் இப்போது ராணுவத்தோரணையில் நடை போட்டு, முன் அரங்கத்துக்குத் திரும்ப வருகிறார்கள். சுற்றி நடைபோடுவதற்கேற்ப அந்த சாமான்கள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு சல்யூட் அடிக்கிறார்கள். கண்ணுக்குத் தெரியாத தம் ஆயுதங்களை அவற்றுக்கு அர்ப்பணம் செய்கிறார்கள். நடைபோட்டுச் சென்று மறைகிறார்கள்.

முதல் மனிதன், தனியாகத் திரும்பவும் வருகிறான். ஓர் இயந்திர மனிதனைப் போல் அவன் இயக்கம் விளங்குகிறது. அதாவது ராணுவத் தோரணையோ, மனிதரின் இயல்பு நடையோ இல்லை. அவனுடைய அசைவு, உடம்பைச் சம நிலையில் வைத்துக்கொள்ளும் பிரயாசையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துல்லியத்தோடும், வெகு தமாஷாகவும் இருக்கிறது. மற்ற இருவரும் அவனைத் தொடர்ந்து இதேபோல வருகிறார்கள். இந்தச் சாமான்கள் எதற்கு இங்கிருக்கின்றன, இவற்றின் உபயோகம் என்ன என்று அறியாதவர்களைப் போன்று, மூவரும் வெகு ஆச்சரியப்பட்டவர்களாகத் தோன்றுகிறார்கள். கடைசியாக, முதல்மனிதன், நாற்காலியானது உட்காருவதற்கானதுதான் என்று தீர்மானித்தவனைப் போல் செயல்படுகிறான். மற்ற இருவரும் திகிலுடன் பிரமித்து நிற்க, அவன் அதில் அமர்கிறான். அச்சம்பவத்துக்கிடையே, அந்தப் பாவச் செயலை எதிர்த்து, இடையிடையே குரல் கொடுக்கிறார்கள். அதாவது, முதல் மனிதன் உட்காருவதற்குப் பாதி குனிந்த நிலையில், மற்ற இருவரும் இயந்திர மனிதனின் இயந்திரக் குரலில் கிரீச்சிடுகிறார்கள். தங்கள் கைகளைக் கொண்டு தங்கள் கண்களைப் பொத்திக் கொள்கிறார்கள். குதித்துக் குரல் எழுப்புகிறார்கள். அதனால் ஒருவன் கீழே விழுகிறான். மற்றவன் உதவியால் மீண்டும் எழுந்து நிற்கிறான். இப்போது, முதல் இயந்திர மனிதன், நாற்காலியில் அமர்ந்து கொள்வதை மட்டும் செய்யாமல், தன் கரங்களை மேஜையில் இருத்திக் கொள்ளவும் செய்கிறான். பின்பு எழுந்து, மேஜையையும் நாற்காலியையும் விட்டு அவர்களிடம் திரும்ப வந்து, நாற்காலி மேஜை என்பவை உட்காருவதற்குத்தான் என்று தான் கண்டுபிடித்த விஷயத்தை மிக அக்கறையுடன் மீண்டும் நடித்துக் காட்டுகிறான். இதற்கிடையில் மற்ற இருவரும் பயத்துடனும் அருவருப்புடனும் எதிர்ப்புகளுடனும் சென்று மறைகிறார்கள். முதல் மனிதன், இப்போது தன் 'கண்டுபிடிப்பில்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுவாகச் சலிப்படைந்தவனாயிருக்கிறான். அவனுக்கு, புத்தம் புதிய ஒரு எண்ணம் பிறக்கிறது. இரண்டாவதாக உள்ள நாற்காலியைத் தூக்கி, தன் நாற்காலிமேல் வைக்கிறான். தன் வேலைத் திறத்தைப் பார்த்து தானே சிலாகித்துக் கொள்கிறான்—ஒரு நாற்காலி மற்றொரு நாற்காலிமேல் அமர்ந்திருக்கிறது. இந்த கலைப் படைப்பைப் படைத்த அசதியில் அவன் கொட்டாவி விடுகிறான். நெட்டி முறிக்கிறான். தூங்குவதற்கு ஒரு இடத்தைத் தேடிப் பார்க்கிறான். கடைசியாக, அவன் மேஜைக்கு அடியில் படுக்க முடிவு செய்து, அங்கே நுழைந்து முடங்கிப் படுக்கிறான்.

இப்போது. மற்ற இரு இயந்திர மனிதர்களும் அரங்கத்துக்குள் திருட்டுத்தனமாகவும் கோபாவேசமாகவும் வருகிறார்கள். ஆனால், ஒரு காரணத்தோடு வந்தவர்களைப் போல, தலைகளை ஒன்று சேர்த்து தம் திட்டத்தைப் பகிர்ந்து கொண்டு, கைகளைப் பிடித்து குலுக்கிச் சந்தோஷப்படுகிறார்கள். இரண்டாவது இயந்திர மனிதன் இரண்டாவதாக இருந்த நாற்சாலியிடத்திற்குச் சென்று, அங்கே அது இல்லாததைக் காண்கிறான். மூன்றாமவன். மூன்றாவது நாற்காலியிடம் சென்று, வக்கிரமான, அதிகமான சந்தோஷத்துடன், அந்நாற்காலியில் பரீட்சார்த்தமாக அமர்த்து பார்க்கிறான். இதை, மிகவும் குதூகலத்தோடும் விஷமத்தோடும் செய்கிறான்.

இதற்கிடையில், இரண்டாமவன், காணாமல் போன நாற்காலி பற்றித் தலையைப் பிய்த்துக் கொள்கிறான், முதல் நாற்காலி இருந்த இடத்திற்குச் சென்று, அங்கு ஒரு நாற்காலி மற்றொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றின் மேல் அமர்த்தி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு மிகவும் குழம்பி நிற்கிறான்: மூன்றாவது இயந்திர மனிதனைத் துணைக்கழைக்கிறான். அவனாலும் அந்த விசித்திர அமைப்பைப் பற்றி விளக்க முடியவில்லை; ஆனால் அவன், நாற்காலியற்ற அந்தஇடத்திலிருந்து குனிந்து பார்த்து மேஜைக்குக்கீழே, முதல் இயந்திர மனிதன் இருப்பதைக் கண்டு பிடிக்கிறான். அவன் அசைவற்ற ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறான். முதலாமவன் கிடக்கும்தோரணையிலிருந்து, அவனைத் தூக்கி நிறுத்தினால் நாற்காலி வடிவத்தில் வளைந்து நிற்பான் என்பதை இரண்டாமவன் ஆராய்ந்து கண்டுபிடிக்கிறான். தன் நண்பன் உட்காருவதற்குத் தோதான நிலையில் அந்த நாற்காலி இருப்பதைக் காட்டி, சந்தோஷ ஆரவாரம் செய்கிறான் அவன். மற்றவனும் ஒத்துக்கொள்கிறான். இப்போது, இரண்டாமவன் முதலாமவனை ஒரு நாற்காலியாக்க முயல்கிறான். குப்பைக்கூடையைத் துணைக்குக் கொண்டு வரும்வரை இது சரியாக நிகழவில்லை. குப்பைக்கூடையின் மேல், அசைவற்ற முதல் மனிதனை உட்கார வைத்ததும் நாற்காலி பூரணமாகிறது. ஆனால், அவன் மடியில் உட்காருவது ஒரு பிரச்னையாகிறது. தலையானது மார்பை நோக்கித் தாழ்ந்து, தூக்க நிலையில் தொங்கி, உட்காருபவனை நேராக நிமிர்ந்து வசதியாக உட்காரவிடாமல் செய்கிறது.

இருவரும் இதனால் குழம்பி நிற்கிறபோது, சடாரென்று அவர்களுடைய இயந்திரத் தன்மை விலகுகிறது. அவர்கள், குதித்து நடக்கும் தம் ஆரம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிக்குத் திரும்ப வருகிறார்கள்? முதலாமவன் குப்பைக் கூடையில் அமர்ந்த நிலையிலேயே தூங்கிக்கொண்டிருக்க, அவனது தலையைச் சீவி யெறிந்துவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடும் என்ற சைகைகளுடன் அவர்கள் தங்கள் தொடக்ககாலத் துள்ளிக் குதித்து நடக்கும் நிலைக்குத் திரும்பி, அரங்கத்தை வளைய வருகிறார்கள்.

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரமஹாநரன்

ஒரு மனித உருவம். ஆணா பெண்ணா என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. அப்படி தலை முடி ஜடைபோட்டு நீண்டு தொங்குகிறது. ஆடை ஏதோ தோலினால் உடல் முழுவதுமாக அணியப்பட்டிருக்கிறது, எவ்வித நாகரீகத்துக்கும் சம்பந்தமற்ற, எவ்வித பால் பாகுபாட்டுக்கும் தொடர்பற்ற ஆடை. உருவம் ஆடிக்கொண்டிருக்கிறது. ஆட்டத்தில் வெளிப்படுவது சுதந்திரமான ஒரு சக்தி மட்டும்தான். அபிநயம், திரை, சங்கீதம் எதுவு மற்ற சக்திமயமான சுதந்திரம்.

ஒரு மேல்நாட்டுக்காரன் வருகிறான். கொஞ்ச நேரம் விமர்சன பூர்வமாகப் பார்க்கிறான். ஆட்சேபணைக் குறிப்புகளை வெளியிடுகிறான். ஆடும் உருவத்திற்கு முன் நின்று சில பாலே நடன போஸ்களைப் பிடிக்கிறான். அந்தப்பாணியில் உருவம் ஆடவேண்டும் என்று கட்டளையிடுகிற சங்கேதங்கள். உருவம் இதை கவனிப்பதாகத் தோன்றவில்லை. மேல் நாட்டான் கையைத் துப்பாக்கி போல்பிடித்து மிரட்டுகிறான். பதில்லை. சுட்டுத் தள்ளுகிறான். உருவம் ஆடியபடியே ஓய்ந்து விழுகிறது. மேல் நாட்டான் போய் விடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய விவசாயி ஒருவர் ஓடிவந்து விழும் உருவத்தைப் பிடிக்கிறார். அது அப்போதும் ஆடிய படியே சரிந்து கொண்டிருக்கிறது. இந்தியர் கொஞ்சம் முதலுதவி செய்கிறார். உடனே உருவம் மீண்டும் எழுந்துவிட்டது. எழுந்து மீண்டும் ஆடுகிறது அதே சக்தி. அதே சுதந்திரம். முதலில் இந்தியருக்கு இதில் மகிழ்ச்சி. அவரும் ஒரு சிறிது சேர்ந்து ஆடுகிறார். இருந்தாலும் அவருக்கு நடனத்தில் பிசகு இருப்பதாகத் தோன்றுகிறது. உண்மையில் முதலில் அவர் உருவத்தைப் பின் பற்றித்தான் ஆடுகிறார். ஆனால் இது அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே முத்திரைகளை விரல்களில் காட்டுகிறார். அபிநயம் பிடிக்கிறார். பரதத்தில் இறங்குகிறார். ஆனால் உருவத்தின் ஆட்டத்துக்கும் அவரது ஆட்டத்துக்குமிடையே இசைவு இல்லை. ஆட்டத்தை உருவம் நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் உருவத்தைப் பிடிக்கிறார். அதன் கைகளைப் பிடித்து அப்படியும் இப்படியும் இழுக்கிறார். பிறகு கால்களை. ஒருவிதமாக உருவம் கட்டுப்பட்டமாதிரி தோன்றுகிறது. கைகளும் கால்களும் இப்போது நடராஜர் போஸ் கொடுக்கின்றன. ஆட்டம் உறைந்த நிலை. இந்தியர் அப்படியும் இப்படியுமாக சுற்றிச் சுற்றிவந்து போஸை மேலும் செப்பனிடுகிறார். சரிந்து விழப் பார்க்கும் உருவத்தைப் பிடித்து நிறுத்துகிறார். ஆனால் உருவத்துக்குள் கொந்தளிப்பு. அது திடீரென எகிறி மீண்டும் மீண்டும் தன் போக்கில் ஆடப் பார்க்கிறது. இந்தியர் விடவில்லை.

சற்றே நடராஜ பாவத்தில் உருவம் உறைந்த நிலை. நிலைமை இப்படி இருக்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் லெப்ட் ரைட் என்று கால்மிதித்து வருகிறார்கள். பின்னால் பெண். முன்னால் இரண்டும் ஆண்கள். முதல் ஆண்தான் லீடர். அவன் மற்ற இருவரையும் நிற்க வைத்து அவர்கள் முன் நின்று பிரசங்க பாணியில் சில சைகைகளைச் செய்கிறான். வலது காலைத் தூக்குகிறார்கள். முதலில் இதை ஒழுங்காகச் செய்தாலும், பெண் ஆவேசமாகத் திடீரென்று தலையை ஆட்டி மறுக்கிறாள். இடது காலைத் தூக்குகிறாள். இதனால் தலைவரின் பாடு சங்கடமாகிறது. அவர் பெண்ணை உதைக்கிறார். அவள் ஓடுகிறாள். இவர் விரட்டுகிறார். பின்னணியில், நடராஜ உருவத்துக்கு உறைவு நிலை நீடிப்பதற்காக இந்தியர் ஒரு குச்சியை குஞ்சிதபாதத்துக்கு முட்டுக் கொடுத்து நிறுத்துகிறார் பெண் இந்தியரிடம் வர இந்தியர் தலைவரைத் தடுக்கிறார்.

இந்தியர் உறைந்த உருவத்தை அனைவருக்கும் காட்டுகிறார். அதற்கு முன்னால் அவரது ஆராதனை, பக்தி, பாவனைகள்.

முதலில் பெண்ணும் இதில் கொஞ்சம் சேர்த்தி. ஆனால் போகப் போக மற்ற இரண்டு ஆண்களும் அதி விமரிசையாக லெப்ட் ரைட்டில் இறங்குகின்றனர். பெண்ணும் லெப்ட் ரைட் ஆரம்பிக்கிறாள், பிறகு இந்தியரும் லெப்ட் ரைட் செய்யும்படி சமிக்ஞை வேண்டுகோள். சாமர்த்தியபாவம் ஆகியவை மூலம் தூண்டுகிறாள். அவர் முதலில் மறுத்து தமது மரபான அபிநயங்களைப் பிடித்தாலும், லெப்ட் ரைட் காரர்களின் வேகம் அதிகரிக்கிறது. அவரும் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிநயங்களுடன் சேர்ந்து லெப்ட் ரைட் போடு கிறார். அப்போது,

திடீரென உருவம் தனது போஸ் கலைந்து குச்சியை எடுக்கிறது. முன்னைவிடப் பயங்கர வேகத்தில் சுழன்று ஆடுகிறது. குச்சியும் அதன் ஆட்டத்தோடு சிலம்பாகச் சுழல்கிறது. நால்வரும் சுற்றிச் சுற்றி ஓடுகிறார்கள். தப்பிக்க வழியில்லை. அவர்கள் அதைச் சுற்றிச் சுற்றி ஓடுகிறார்கள்.

□ □

A. KUGHAN
72, 2nd LANE
ANANDAPURI
TRINCO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்ஷத்ரவாஸி

பிரேமிள்

1960-லிருந்து எழுதிவரும் பிரேமிள் முதன்மையாக ஒரு கவிஞர். சூக்ஷ்ம திருஷ்டி கொண்ட விமர்சகர். ஓவியரும் சிற்பியும் கூட. சிறுகதைகளிலிருந்து விஞ்ஞானக் கட்டுரைகள் வரை எழுதியுள்ள பிரேமிள் நக்ஷத்ரவாஸி' என்ற இந்த நாடகத்தை 1973-ல் எழுதினார். பிரசுரம் மூன்று வருஷங்களுக்குப் பின்பு. இலங்கையின் பெராதெனிய பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் இதனை மேடையேற்றியதும், இலங்கையின் பாலேந்ரா நாடகக் குழுவினர் வெவ்வேறு இலங்கை நகரங்களில் காட்சிக்குக் கொண்டு வந்ததும், இவர்கள் இப்போது லண்டனில் நக்ஷத்ரவாஸியை அரங்கேற்றியுள்ளதும் செய்திகள். இருபது வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்டதெனினும், எழுதப்பட்டு பத்து வருஷங்களுக்குப் பின்பு, உலகெங்கும் சிதறிய தமிழர்களின் மாற்றுச் சூழலில் தமிழின வ ளைநில உணர்வுகள் திணறுவதை நக்ஷத்ரவாஸி முன்னுணர்வுடன் சித்தரித்துள்ளது. 'கூட்டியக்கம்' என்ற பாவனை (mime) நாடகமும் இந்நூலில் அடங்கும்

NAXATRAVASI by Premell,
Published by TRIKONESH PRACHURAM
Back Cover: Author's Self-Portrait
Wrapper Design by the Author
Cover: 'Lucifer' by Sir Jacob Epstein,
த்ரிகோணேஷ் ப்ரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org